# திருக்கேதீச்சரம்



அகளங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்

(நாட்டிய நாடகம்)

## அகளங்கன்

வெளியீடு :

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் - 45

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் :- **திருக்கேதீச்சரம்**

வகை :- நாட்டிய நாடகம்

எழுதியவர் :- **அகளங்கன் (நா.தர்மராஜா)**

முகவரி :- 90, திருநாவற்குளம், வவுனியா

பதிப்புரிமை :- திருமதி பூரணேஸ்வரி தர்மராஜா B.A (Hons)

வெளியீடு :- வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

முகவரி :- 90, திருநாவற்குளம், வவுனியா

முதலாம் பதிப்பு:- 2022 யூலை 05

அச்சுப்பதிப்பு :- வாணி கணினிப் பதிப்பகம்.
இல 85, கந்தசுவாமி கோவில்வீதி,
வவுனியா 024- 2223658

விலை :- ரூபா 500/=

ISBN :- 978-624-6141-01-1

மின்னஞ்சல் :- akalankan04@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

↓

கௌரி அம்மை சமேத

## திருக்கேதீச்சர நாதருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வெளியீட்டுரை | 7 |
| வாழ்த்துரை | 9 |
| முகவுரை | 11 |
| முன்னுரை | 17 |
| தமிழ் வாழ்த்து | 22 |
| திருக்கேதீச்சரம் | 23 |
| இந் நூலாசிரியர் விபரம் | 74 |
| இந் நூலாசிரியரின் நூல்கள் | 77 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

1992 இல் எழுதிய "நம்பியாரூரர்" என்ற தலைப்பிலான நாட்டிய நாடகத்துடன் இன்னும் ஒரு கலை இலக்கிய ஊடகத்தினை கைவந்த கலை ஆக்கினார் தமிழ்மணி அகளங்கன்.

கலாபூஷணம் திருமதி துவாரகா கேதீஸ்வரன் அவர்களின் நாட்டிய அமைப்பில் அந் நாட்டிய நாடகம் வவுனியா சாயி சமித்தி மண்டபத் திறப்புவிழாவில் அரங்கேற்றம் கண்டது.

தொடர்ந்து "பத்தினித் தெய்வம்" "கற்பின் கனலி" முதலான இவரின் நாட்டிய நாடகப் படைப்புக்கள் நிருத்திய வாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களின் நாட்டிய அமைப்பில் அரங்கேறி பல பரிசுகள் பெற்றன.

பின் "பத்தினித் தெய்வம்", "கற்பின் கனலி" ஆகிய இரண்டு நாட்டிய நாடகங்களும் சேர்ந்து "பத்தினித் தெய்வம்" என்ற பெயரில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 18ஆவது வெளியீடாக நூல் வடிவிலும் வந்து வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசும் பெற்றது.

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை எழுதி மேடைகண்ட இவரின் அடுத்த நாட்டிய நாடகமாக இப் படைப்பு வெளிவருகின்றது.

"திருக்கேதீச்சரம்" என்னும் தலைப்பில் திருக்கேதீச்சரக் கோயில் குடமுழுக்கு சிறப்பு நிகழ்வாக அரங்கேறும் இவரது இந் நாட்டிய நாடகத்தினை இவர் நூலுருவிலும் கொண்டுவரும் பணி பாராட்டத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 45 ஆவது வெளியீடாகவும், இவரது 51 ஆவது நூலாகவும் வெளிவரும் "திருக்கேதீச்சரம்" நாட்டிய நாடக நூல் கலை இலக்கிய உலகில் வன்னி மண்ணிலிருந்து ஒரு சாதனை படைக்கும் என நம்புகிறேன்.

அகளங்கன் அவர்களின் கலை இலக்கியப் பணி தொடர வாழ்த்துக்கள்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்.
ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
இலங்கை
செயலாளர்,
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

"திருக்கேதீச்சரம்" என்னும் தலைப்பிலே தமிழ்ப்புலவர் அகளங்கன் அவர்கள் திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் வரலாற்றை நாட்டிய நாடக நூலாக எழுதி வெளியீடு செய்யவிருக்கும் செய்தி கேட்டு, மட்டில்லா மகிழ்ச்சியும் பரவசமும் அடைகின்றேன். அதற்குக் காரணமும் உண்டு.

17 ஆண்டுகளுக்கு முன் சுனாமியாலும், யுத்தத்தினாலும் அநாதரவான பிள்ளைகளை அரவணைத்துக் கொண்டு திருக்கேதீச்சர ஆலயத்தின் அடிவாரத்திலே அமைக்கப்பட்டது தான் "சிவனருள்" இல்லமாகும்.

அதை இன்றளவும் சிறப்புற நடாத்த உறுதுணை புரிகின்ற சிவபெருமானை பலவாறும் நேசித்தும் பூசித்தும் வந்தபோதும், எம்பெருமானின் பெருமையையும் தலத்தின் வரலாற்றுச் சிறப்பையும் யாவரும், குறிப்பாக எதிர்காலச் சந்ததியினரும் அறிய வேண்டு மென்ற ஆவலில் ஓவியமாக வடிவமைத்தேன். அதற்கு ஒளி வடிவம் கொடுத்து இணைய தளத்தில் பதிவிட்டேன். ஆனாலும் எனக்கு மன நிறைவு ஏற்பட வில்லை.

திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் வரலாற்றை எம் "சிவனருள்" சிறார்களை வைத்து நாட்டிய நாடகமாக திருக்கேதீச்சர கும்பாபிஷேக நாளில் அரங்கேற்றம் செய்ய வேண்டுமென்ற விருப்பம் ஈராண்டுகளுக்கு முன் என் எண்ணத்தில் தோன்றிட கேதீச்சர நாதனை வேண்டினேன்.

அது இன்று கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளில் (05-07- 2022) நாட்டிய நாடகமாகவும் நூலாகவும் அரங்கேற திருவருள் பாலித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தானோ என்னவோ, நான் முன்பின் அறிந்திராதவரும், நாட்டியத் துறையில் ஆழத் தடம் பதித்தவருமாகிய நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களை எனக்கு அறிமுகம் செய்துவைத்து அவரூடாக "திருக்கேதீச்சரம்" என்ற இந்த நாட்டிய நாடக நூலை எழுத, தமிழ் சைவத் தொண்டாற்றி பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் தமிழ்ப்புலவர் அகளங்கன் அவர்களை அறியச் செய்து இன்று என் எண்ணத்தைக் கருவாக்கி அதை நூலாக உருவாக்கி வெளியீடு செய்வதுகண்டு அக மிக மகிழ்கின்றேன். புளகாங்கிதம் அடைகின்றேன்.

இதையெல்லாம் எண்ணும் போது என் கண்கள் பனிக்கின்றன. சொல்ல வார்த்தையில்லை. ஆனாலும் உங்கள் பணியை வாழ்த்துகின்றேன். எல்லாம் சிறப்புற திருக்கேதீச்சரப் பெருமானை வேண்டுகின்றேன்.

நன்றி

டாக்டர்.ஜெ.நமசிவாயம்,

(லண்டன்)

நிறுவனர்,

சிவனருள் இல்லம், திருக்கேதீச்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

திருக்கேதீச்சரப் பெருமானின் திருக்கோவிற் சரித்திரம் தாங்கிய நூலாக அகளங்கன் ஐயா அவர்களின் "திருக்கேதீச்சரம்" நாட்டிய நாடக நூல் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

இவரது இந்த நாட்டிய நாடகத்தோடு பண்டிதர் வீரசிங்கம் பிரதீபன் அவர்கள் எழுதிய "மண்டோதரி கல்யாணம்" நாட்டிய நாடகத்தின் ஒரு பகுதியையும் சேர்த்து "திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து" என்ற பெயரில் நாட்டிய நாடகமாகத் தயாரித்தோம். அதற்கு அனுமதி தந்த அகளங்கன் ஐயா அவர்களுக்கு எனது நன்றி.

திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகப் பெருவிழாவிற்காக (06.07.2022) இந் நாட்டிய நாடகம் கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளில் (05-07-2022) அரங்கேற்றப்படுகின்றது.

திருக்கேதீச்சரர் ஆலய "சிவனருள்" இல்ல மாணவர்களும், எமது வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களும், வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி அருளக மாணவர்களுமாக நூற்றிற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இப்படைப்பை நாம் அரங்கேற்றுகிறோம்.

கலாநிதி தமிழ் மணி அகளங்கன் ஐயா அவர்களினால் எழுதப்பட்ட சரித்திரப் புகழ் பெற்ற நாட்டிய நாடகமாக இந் நாட்டிய நாடகம் அமைந்துள்ளது.

இப்படி ஒரு நாட்டிய நாடகத்தை அரங்கேற்ற வேண்டுமென்று விரும்பி எம்மை ஈடுபடுத்தியவர் டாக்டர் .ஜெ. நமசிவாயம் ஐயா அவர்கள். இவரது உள்ளத்தில் சிவனது நாமம் ஊற்றெடுத்து வற்றாத நதியாக ஓடிக்கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சரநாதரின் வரலாற்றை ஆடலாகக் காண வேண்டுமென்ற ஆவல் அவர் உள்ளத்தில் எழுந்ததன் பயனே "திருக்கேதீச்சரம் ஒரு தேன்பொந்து" என்ற நாட்டிய நாடகமாக மலர்ந்துள்ளது.

இந் நாட்டிய நாடகம் விநாயகப் பெருமானுக்குரிய காப்பு வெண்பாவுடன் ஆரம்பமாகி "திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து...." எனத் தொடங்கும் பாடலுடன் தொடர்கின்றது.

துவஷ்டாவின் வேண்டுகோள் நிமித்தம் விஸ்வகர்மாவால் ஆலயம் அமைக்கப்படல், இலங்கை சிவபூமி, மாதோட்டச் சிறப்பு, பாலாவியின் சிறப்பு, மண்டோதரிக்கு சிவபெருமான் குழந்தையாகக் காட்சி கொடுத்த அற்புதம்,கேது பகவான் பாவ விமோசனம் பெற்ற கதை, இராமபிரான் பிரம்ம ஹத்தி தோஷம் நீங்கியமை, விஜயன் திருக்கேதீச்சர நாதரை வழிபாடு செய்தமை,நாயன்மார்களின்அகத்திலேதிருக்கேதீச்சரநாதரின் அருளுருக் கோலம், இராஜ இராஜ சோழனின் ஆட்சியில் திருக்கேதீச்சரம், எனத்தொடர்ந்து, போர்த்துக்கேசர் வருகை, ஆறுமுக நாவலர் "திருக்கேதீச்சரத்தில் ஒரு தேன் பொந்து இருக்கிறது" என அடையாளம் காட்டியது, கொழும்பிலிருந்து வர்த்தகம் செய்த தமிழகத்து நாட்டுக்கோட்டை நகரத்து இராம. அரு.பழனியப்பச் செட்டியார் பிரித்தானியரிடமிருந்து ஏலத்தில் காணியை வாங்கியது, பின் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணை பசுபதிச் செட்டியார் கோயில்க் காணியைப் பெற்ற வரலாறு, சைவ சமயப் பெரியார்களால் கோயில் புதுப்பொலிவு பெறல், யுத்த காலத்தில்; ஆலயம், சிவனருள் இல்லமும் திருக்கேதீச்சரமும், சிவனருள் இல்லப் பிள்ளைகளின் சிறப்பான செயற்பாடுகள், முதலான பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இந் நாட்டிய நாடகம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இது ஒரு அரும் பெரும் பொக்கிஷம். எத்தனையோ ஆண்டுகளின் பின் திரும்பிப் பார்த்தாலும் திருக்கேதீச்சரர் ஆலய வரலாற்றை அறியக் கூடிய ஒரு ஆடற் கதை இது. இந்த ஆடற் கதைக்கு ஆடலமைப்புச் செய்ய என்னை இறைவன் படை த்ததையிட்டு பேரானந்தம் கொள்கிறேன்.

இந்த அருளை எனக்குத் தந்த திருக்கேதீச்சர நாதருக்கும், டாக்டர்.ஜெ.நமசிவாயம் ஐயா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இந் நாட்டிய நாடகத்தை எனக்கு எழுதித் தந்து ஆலோசனை வழங்கி நூலாகவும் ஆக்கி நிலைக்கச் செய்துள்ள அகளங்கன் ஐயா அவர்களுக்கும் எனது நன்றி.

அகளங்கன் ஐயா அவர்களது "அகளங்கன் இசை நடனப் பாடல்கள்" நூலுக்கு நான் எழுதிய சிறப்புரையை பொருத்தம் கருதி இங்கு தருகிறேன்.

"எமது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் போஷகராக எமது கல்லூரியின் வெற்றிப் பயணத்திற்கு வழி காட்டிவரும் தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்களுடனான எனது நடனப் பயணம் இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்துவிட்டது.

தமிழ்மொழித்திறன் போட்டிகளுக்காக எனது வேண்டு கோளுக்கிணங்க இவர் எழுதிய பல நாட்டிய நாடகங்களிற்கு நான் நடன அமைப்புச் செய்து தயாரித் திருக்கிறேன். அவற்றில் மூன்று நாட்டிய நாடகங்கள் தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளன. ஒரு நாட்டிய நாடகம் இரண்டாம் இடம் பெற்றுள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு 2007 ஆம் ஆண்டில் நடத்திய ஒருமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர காவியக் கதா நாட்டிய நாடகப் போட்டியில் இவரது "பத்தினித் தெய்வம்" நாட்டிய நாடகம் முதலிடம் பெற்றதை மறக்க முடியாது. இது சிலப்பதிகாரத்தின் சுருக்கமான நாட்டிய நாடகமாக இருந்தது. இந்நாட்டிய நாடகம் பல அரங்குகளைக் கண்டு பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது.

இதே ஆண்டில் தமிழ் மொழித்திறன் போட்டிக்காக இவர் எழுதித் தந்த "கங்குலும் பகல்பட வந்தான்" என்ற நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றது. இது கம்ப இராமாயணத்தில் வரும் அசோகவனக் காட்சியாக அமைந்தது. இந்த இரண்டு நாட்டிய நாடகங்களையும் வடிவமைத்து தயாரித்து நட்டுவாங்கம் செய்த பெருமையில் இன்றும் நான் மனமகிழ்வு கொள்கிறேன்.

"கங்குலும் பகல்பட வந்தான்" என்ற நாட்டிய நாடகத்தை "கற்பின் கனலி" என்ற பெயரில் பின்பு பல நிகழ்ச்சிகளில் மேடையேற்றினோம். அகளங்கன் ஐயா அவர்கள் "பத்தினித் தெய்வம்", "கற்பின் கனலி" ஆகிய இந்த இரண்டு நாட்டிய நாடகங்களையும் "பத்தினித் தெய்வம்" என்ற பெயரில் நூலாக்கி 2008 ஆம் ஆண்டில் வெளியிட்டார். அந்த நூல் வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசைப் பெற்றது.

இந்த இரண்டு நாட்டிய நாடகங்களிலும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவிகள் பங்குபற்றினர். அப்போது நானும் அகளங்கன் ஐயா அவர்களும் அப்பாடசாலையில் ஆசிரியப் பணி புரிந்துகொண்டிருந்தோம். அக்காலத்தில் வேறுபல நாட்டிய நாடகங்களையும் இவரிடம் பெற்று வேறு பல போட்டிகளில் பங்கு பற்றி தேசிய மட்ட முதலிடம் உட்பட பல வெற்றிகளைக் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மூலம் இவரது பல நாட்டிய நாடகங்களுக்கும், நடனப் பாடல்களுக்கும் நாட்டிய வடிவம் கொடுத்து, தயாரித்து, நட்டுவாங்கம் செய்து மத்திய கலாசார அமைச்சு,தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முதலானவை ஆண்டுதோறும் நடத்திய நாட்டிய நாடகப் போட்டிகள், நடனப் போட்டிகள் பலவற்றில் முதலாம் இடங்கள் உட்பட பல பரிசுகளைப் பெற்றோம்.

பிரதேச, மாவட்ட, மாகாண கலை இலக்கியப் பெரு விழாக்களிலும், வேறு விழாக்கள் பலவற்றிலும் இவரது நாட்டிய நாடகங்களையும், பாடல்களுக்கான நடனங்களையும் மேடையேற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளோம். பல போட்டிகளில் பரிசுகளையும் பெற்றோம்.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக வவுனியா மாவட்டத்தில் பரதநாட்டியத்துறையில் நாம் சாதனை படைப் பதற்கும், பரதநாட்டிய வளர்ச்சியில் முன்னணிக் கல்லூரியாகப் பங்கு கொள்வதற்கும் எமது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரிக்கு உறுதுணையாக இருப்பவர் அகளங்கன் ஐயா அவர்கள்.

என்னிடம் பரதநாட்டியம் பயின்ற மாணவர்களின் அரங்கேற்ற நிகழ்வுகளுக்கு அகளங்கன் ஐயா அவர்களே பெரும்பாலும் தலைமை வகித்து நிகழ்வுகளைச் சிறப்புற நடத்தி உதவியிருக்கிறார். இவரது நாட்டியப்பாடல்கள் பலவற்றுக்கு எமது மாணவர்கள் பலர் அரங்கேற்ற நிகழ்வுகளில் நடனம் ஆடியுள்ளனர். வேறு நிகழ்வுகளிலும் ஆடியுள்ளனர்.” என்று குறிப்பிட்டுள்ளேன்.

இவரது திருக்கேதீச்சரம் பற்றிய இந்த நாட்டிய நாடகம் உலகம் எங்கும் ஓங்கி ஒலிக்கும், இது அரங்கம் காணும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்தின் பஞ்சம் பிணி துன்பம் யாவும் நீங்கும். என நம்புகிறேன். ஐயா அவர்களுக்கு எமது மன மார்ந்த நன்றிகள்.

இந் நாட்டிய நாடகத்தின் பாடல்களுக்கான இசையமைப்பை நுண்கலை மாணி சிவநாதன் பிரதீபன் ஏற்றுள்ளார். அவரது குரு திரு.ந.பரந்தாமன் அவர்களும், அவரது நண்பர் நயினை இசைமைந்தன் சிவ மைந்தன் ஆகியோரும் சேர்ந்து இசையமைப்பில் பணியாற்றியுள்ளனர்.

நாம் நாட்டிய நாடகங்களையும், நாட்டியப் பாடல்களையும் கேட்டவுடன் எங்களின் தேவைக்குத் தகுந்தபடி உடனடியாக எழுதித் தந்து எம்மை உற்சாகப்படுத்திவரும் அகளங்கன் ஐயா அவர்கள் இந்த வரலாற்றுப் பெருமை மிக்க நாட்டிய நாடகத்தை எழுதித் தந்தமைக்கும் அதை நூல் வடிவில் கொண்டு வந்துள்ளமைக்கும் எமது நன்றிகள்.

அகளங்கன் ஐயா அவர்கள் நீண்டகாலம் சைவப் பணியும், தமிழ்ப்பணியும் செய்து, உடல் உள ஆரோக்கியத்துடனும் நிறைந்த மனச் சந்தோசத்தோடும் வாழ திருக்கேதீச்சர நாதர் உடனிருந்து அருள் புரியவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இந்த நாட்டிய நாடகம் சிறப்பாக அரங்கம் காணவும், இந் நூல் சகல வகையிலும் சிறப்புறவும் திருக்கேதீச்சர நாதரின் தாள் பணிந்து வேண்டுகின்றேன்.

நன்றி

நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம் M.F.A
(ஆசிரிய ஆலோசகர் நடனம், வவுனியா தெற்கு வலயம்.
தலைவர், நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி
வவுனியா.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எனது இரண்டாவது நாட்டிய நாடக நூலாக "திருக்கேதீச்சரம்" நாட்டிய நாடக நூல் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

அதுவும் திருக்கேதீச்சரம் ஆலய குடமுழுக்குப் பெருவிழா நிகழ்வாக முதல் நாளில் (05.07.2022 )இந் நாட்டிய நாடக அரங்கேற்றமும், இந் நூல் வெளியீடும் நடைபெறுவது இன்னும் இரட்டிப்பு மகிழ்ச்சியளிக்கிறது.

2008 இல் எனது "பத்தினித் தெய்வம்" நாட்டிய நாடக நூல் வெளிவந்தது. இந்நூலில் சிலப்பதிகாரத்துக் கண்ணகியோடு சம்பந்தப்பட்ட "பத்தினித் தெய்வம்" நாட்டிய நாடகமும், கம்ப இராமாயணத்துச் சீதையோடு சம்பந்தப்பட்ட "கற்பின் கனலி" நாட்டிய நாடகமும் அடங்கியிருந்தன.

இந்நூல் வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசைப் பெற்றுத்தந்து, எனது நாட்டிய நாடக எழுத்துப் பணியையும், நூலாக்கப் பணியையும் ஊக்குவித்தது.

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை நான் எழுதியிருக்கிறேன். அவற்றில் மூன்று நாட்டிய நாடகங்கள் தேசிய மட்ட தமிழ்த் திறன் போட்டிகளில் முதலிடம் பெற்றன. ஒன்று இரண்டாமிடம் பெற்றது.

மத்திய அரசின் கலாசார அமைச்சு நடத்திய போட்டிகளிலும், வேறு போட்டிகளிலும் எனது பல நாட்டிய நாடகங்கள் முதலிடம் உட்பட பல பரிசுகளைப் பெற்றன.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்,(தேசியப் பாடசாலை) வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் (தேசியப் பாடசாலை), வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா பண்டாரிகுளம் விபுலானந்தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி(தேசியப் பாடசாலை), யாழ்ப்பாணம் வசாவிளான் மத்திய கல்லூ ரி, திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி (தேசியப் பாடசாலை) முதலான பல பாடசாலைகள் எனது நாட்டிய நாடகங்களைத் தயாரித்துள்ளன. அவைகளுக்கு எனது நன்றி.

எனது முதல் நாட்டிய நாடகமான "நம்பியாரூரர்" நாட்டிய நாடகத்தை (இரண்டு மணிநேரம்) தயாரித்து நெறியாளுகை செய்து அரங்கேற்றிய கலாபூஷணம் திருமதி துவாரகா கேதீஸ்வரன் அவர்களுக்கு எனது நன்றி.

எனது நாட்டிய நாடகங்களில் அதிக அளவிலானவற்றை தயாரித்து நெறியாளுகை செய்து; வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் மூலமாகவும், வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் மூலமாகவும் மேடையேற்றிய நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களுக்கு நன்றி.

எனது நாட்டிய நாடகங்களை தயாரித்து நெறியாளுகை செய்து மேடையேற்றிய, செல்வி.சண்முகப்பிரியா குலேந்திரன், திருமதி கிருபாகரி யோகராஜா, திருமதி துஷ்யந்தி வேலுப்பிள்ளை, அமரர்.திருமதி விஜயலக்சுமி ஜேக்கப், திருமதி கருண ரூபினி குணநிதி, கலாநிதி.செந்தூர்ச்செல்வன் முதலான நினைவில் நிற்கும் கலைஞர்களுக்கு என் நன்றி.

யாழ்ப்பாணம், இணுவில் இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர், திருகோணமலை பண்டிதர் இ.வடிவேலு முதலான சிலரே ஈழத்தில் நாட்டிய நாடகங்களை நூல்களாக வெளியிட்டுள்ளனர். எனது இத்துறை முன்னோடிகளாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்களான அவர்களின் ஆசீர்வாதங்களை வேண்டி, நன்றி கூறுகின்றேன்.

இந்நூலுக்கு நல்லதொரு முக்வுரையைத் தந்ததோடு நூறுக்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு இந் நாட்டிய நாடகத்தை அரங்கேற்றும் நிருத்தியவாணி, சகோதரி திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளே இல்லை.

அவருக்கும் அவரது குடும்பத்தினர்க்கும், கலைக் குழுவினருக்கும் எல்லாம் வல்ல திருக்கேதீச்சர நாதரும், கௌரி அம்மையும் எல்லாச் சிறப்புக்களையும் வழங்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இந் நாட்டிய நாடகம் எழுதுவதற்கு உந்து சக்தியாக இருந்து உறுதுணையாகி வழிகாட்டி, வாழ்த்துரையையும் வழங்கிச் சிறப்பித்துள்ள, திருக்கேதீச்சர "சிவனருள்" இல்லத்தின் நிறுவனர் பெருமதிப்புக்குரிய டாக்டர் ஜெ.நமசிவாயம் ஐயா (லண்டன்) அவர்களுக்கு நன்றி.

இந்நூலின் அட்டையின் பின்புறத்தில் என்னைப் பற்றி எழுதி என்னை மகிழ்வித்து உற்சாகப்படுத்தியிருக்கும் என் மதிப்புக்குரிய எழுத்தாளர் கேணிப்பித்தன் அவர்களுக்கும் நன்றி.

எனது. வாலி (ஆய்வு), வன்னிப் பிரதேச வயற் பண்பாடு" (ஆய்வு) ஆகிய நூல்களின் வெளியீடுகளுக்கான முழுச் செலவையும் தந்ததோடு, எனது ஏனைய எல்லா நூல் வெளியீடுகளுக்கும் முன்னின்று உதவிவரும் எனது தம்பியும், எழுத்தாளருமாகிய திரு.க.குமார குலசிங்கம் (குந்தையா சிங்கம் - சுவிஸ்) அவர்களுக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது "முற்றத்துக் கரடி" சிறுகதைத் தொகுப்பு, "அகளங்கன் இசை நடனப் பாடல்கள்" ஆகிய நூல்களின் வெளியீட்டுச் செலவுகளை முழுமையாகத் தந்துதவி எனது ஆக்கங்கள் யாவும் நூலுருப்பெற உதவிவரும் பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணன் (லண்டன்) அவர்களுக்கு என் நன்றி.

எனது நூல் வெளியீடுகளுக்காக நிதி உதவி செய்த எனது நண்பன் திரு.செல்வசுந்தரம் இரவிச்செல்வன் (நியூசிலாந்து) அவர்களுக்கும் எனது உறவினர் திரு.சு.மயில்வாகனம் (அவுஸ்ரேலியா) அவர்களுக்கும் எனது நன்றி.

வவுனியா ஸ்ரீகந்தசுவாமி கோவில் வீதியில் 50 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து அமரரான திருமதி நவரஞ்சிதமலர் (மனோண்) இராமச்சந்திரன் அவர்களின் நினைவாக அவரது சகோதரரும் எனது நண்பருமாகிய திரு. ஐயாத்துரை குலவீரசிங்கம் (லண்டன்) இந்நூல் வெளியீட்டுக்கான செலவில் ஒருபகுதியைத் தந்துதவியுள்ளார். அவர்களுக்கு எனது நன்றி.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட வெளியீடாக இந்நூலை வெளியிட ஏற்பாடு செய்து வெளியீட்டுரையையும் தந்துதவிய வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டச் செயலாளரும் யாழ் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளருமாகிய, என் பெருமதிப்புக்குரிய கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களுக்கும் என் நன்றி.

எனது பல நூல்களை தனது எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மூலம் வெளியிட்ட எனது எழுத்தாள நண்பர் டாக்டர் ஓ.கே. குணநாதன் அவர்களுக்கும், எனது பல நூல்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பிரதி பெற்றுச் சிறப்பித்த அமரர் சிவநெறிப் புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி, அருட்கலை வாரிதி கலாபூஷணம் ஸ்தபதி சு.சண்முகவடிவேல் ஆகியோருக்கும் எனது நன்றி.

அச்சுப்பிழைகளைத் திருத்தி ஆலோசனை வழங்கி உதவிய எனது மூத்த சகோதரர் கலாபூஷணம் நா.தியாகராஜா அவர்களுக்கும் என் நன்றி.

"திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து "என்ற பெயரில் அரங்கம் காணும் இந்நாட்டிய நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்கள், திருக்கேதீச்சரர் ஆலய சிவனருள் இல்லச் சிறார்கள், வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்கள், வவுனியா கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக மாணவிகள் ஆகிய யாவருக்கும் எனது நன்றி.

நானேயாகி என் எழுத்துப் பணிகளுக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்குபவரும், என் ஆக்கங்களுக்கு முதல் வாசகியாகவும் முதல் இரசிகையாகவும் முதல் விமர்சகியாகவும் இருந்து நூல் வெளியீட்டுக்கான அனைத்துக் கருமங்களிலும் பங்கு கொண்டு என்னை உற்சாகப் படுத்திவரும் என் அன்பு மனைவிக்கும் என் இனிய நன்றி.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த வவுனியா வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும், நூல் வடிவமைப்பு அட்டைப்பட வடிவமைப்பு ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்து தந்த செல்வி.ஜெ.திவ்யா அவர்களுக்கும் என் நன்றி.

இந் நாட்டிய நாடக நூலை ஆதரிக்கக் காத்திருக்கின்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி.

அன்புடன்
அகளங்கன்

"தமிழ் அதர்"
90, திருநாவற்குளம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்த்து

இசைத்திட இனி தாகும் எங்கள் பெரு மை - தமிழ்
இன்பமோ சொல் லினிலே சொல்லல் அரு மை
திசைதோறும் எங்கள் மொழி செய்யும் புது மை - இது
தேவர்க்கும் கடவு ளர்க்கும் என்றும் இனி மை.
(இசைத்.... )

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும். (இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும் (இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர். (இசைத்....)

**இசையமைப்பு : திரு.சோ.ஜெயச்சந்திரா**

**பாடல் : அகளங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருக்கேதீச்சரம்

(நாட்டிய நாடகம்)

## காப்பு

**இராகம் : ஹம்சத்வனி**

ஆனை முகமும் அருள்சேர் விழிமூன்றும்
பானை வயிறும் பருமருப்பும் - வானை
அளந்த திருவடிவும் அன்பருக்கு இன்பம்
வழங்கு திருவடியும் காப்பு.

## காட்சி – 1

நாதஸ்வரம், தவில், மத்தளம், உடுக்கு, சங்கு, சேமக்கலம், மணி முதலான வாத்தியங்களின் ஒலிகள் முழங்க, காவடியாட்டம், கோலாட்டம், கரகாட்டம், மயில் நடனம் முதலான நடன நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்க திருக்கேதீச்சர நாதர் கௌரி அம்பாளுடன் திரு உலா வருதல்.

### மல்லாரி பாடுதல்

ஸா பா மா; மக மக ஸா....
ஸா பா மா;/ மக மக/ ஸா; நி// ஸஸா பபாஸ்ஸ்/ மமா/ மகஸ்நி//
தா தீ தோம் ததிங்கிண தொம் ததா தித்தொம் ஸகக ஸமம ஸப /பஸ்
நிநி பமஸ்க்;/// க்ஸ்நிபஸ்ாஸ்//நிபஸ்நி /;பமக //
தகிட தஜொனு திமித ததிங்கிணதொம் ததீம்
தஜொனுத தாம் தகிட தீ ம் தஜொனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 2

## சிவன் பார்பதி தாண்டவ இலாசிய நடனம்

## காட்சி – 3

இராகம்:–சரஸ்வதி தாளம்:– ஆதி

### பல்லவி

திருக்கே தீச்சரம் ஒரு தேன்பொந்து – சிவத்
தேனைஅருந்துதற்கு நீ முந்து

### அனுபல்லவி

நாவலர் காட்டிய வழி யாகும் – அது
நம் சைவ மக்களுக்கு விழியாகும்

### சரணம்

சம்பந்தர் பாடியதோ ஒரு பதிகம் – அதில்
சரித்திரப் பெருமைகளோ மிக அதிகம்
சுந்தரர் பாடியதும் ஒரு பதிகம் – அது
சுந்தர மானதொரு திருப் பதிகம்

வண்டோ தரிஎன்றே மணி வாசகர் – தன்
வாயாரப் பாடும் அந்த மண்டோதரி
கண்டிடக் குழந்தைவடி வான பெருமான் – அங்கு
கருணை பொழியவந்து காட்சி தருவான்

நாவுக் கரசர்ஒரு பாடல் இசைத்தார் – அதனால்
நால்வரும் பாடிய தோர் திருத்தலமாய்
வாவிக் கருகில்உள்ள கேதீச் சரம் – தொழ
வாரும் அடியவரே சுகம் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பா லாவிக் கருகிலுள்ள கேதீச்சரம் – தொழ
பாவ வினைகளெல்லாம் அகன்று விடும்)

வண்டமர் ஓதி என்னும் மண்டோதரி – தொழ
மயன்என்னும் அவள்தந்தை கோயி லமைத்தார்
எண்டிசை புகழும் இராவ ணேஸ்வரனால் –அன்று
ஏத்தி வணங்கப்பெற்றார் எங்கள் பெருமான்

மகாதுவட்டா அமைத்த நகர் மாதோட்டம் – நல்ல
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்டம்
வாகான கௌரியம்மை அரு கிருக்க – ஈசன்
பாலாவிக் கரையினிலே கோவில் கொண்டார்

நித்திய மணவாளர் கௌரி நாதர் – மிக
நீண்டிடும் புகழ்பெற்ற நாக நாதர்
சத்திய மாய்அருள் கேது நாதர் – என்றோ
சுயம்பு வாய்உரு வானார் அக்கரையில்

கேது பகவான் வந்து வழிபட்டதால் – ஈசர்
கேதீஸ்வரர் என்றே பெயர் பெற்றார்.
சேதுக் கரையில் நின்று சம்பந்தரும் – பாடிச்
சீர்மிகுந்த உலவாக்கிழி பரிசு பெற்றார்.

தமிழ்நாட்டு நாட்டுக் கோட்டை நகரத்து – ராமஅரு
பழனியப்பச் செட்டி யாரின் மூலமாக
பசுபதிச் செட்டி யாரின் முயற்சியிலே – இங்குள்ள
பலர் சேர்ந்து வாங்கிய காணியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருக் கும்ஈசன் அரு மருந்தாய் – நல்ல
அழகிய பெருந்துறையில் கோயில் கொண்டார்.
திருக்கே தீஸ்வரன்தாள் பணிந் திடுவோம் – யாரும்
தீர்க்காத பிறவிநோயைத் தீர்த் திடுவோம்

சிவபெருமான், கௌரி அம்மை, நாவலர், இராவணன், மண்டோதரி, மயன், மகா துவட்டா, விஸ்வகர்மா, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர், ராம அரு பழனியப்பச் செட்டியார், பசுபதிச் செட்டியார் ஆகியவர்களைக் காட்டலாம்.

## காட்சி – 4
## ஈழம்

ஒலிக்குரல்

நாம் வாழும் ஈழநாடு, இலங்கை, லங்கா, லங்காபுரி, இலங்காபுரி, ஈழம், சேரன் தீவு என்ற பொருளில் செரண்டிப், தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்ததால் தம்பபன்னி என்ற பொருளில் தப்பிரபேன், ஒளி நாடு, நாவலந்தீவு, இரத்தின துவீபம், நாக நாடு, நாக தேசம், ஏழ்மலை நாடு, ஜம்புகோளப் பட்டினம், சிலோன், சிவபூமி முதலான பல்வேறு பெயர்களால் பல்வேறு காலங்களில் அழைக்கப்பட்டு ஸ்ரீலங்கா என இப்போது அழைக்கப் படுகிறது. எமது நாட்டை இந்து சமுத்திரத்தின் முத்து என்பார் ஆங்கிலேயர்.

**இராகம்: காம்போதி**

ஓம் சிவாயநம ஓம் சிவாயநம ஓம் சிவாயநம
ஓம் சிவாயநம ஓம் சிவாயநம ஓம் சிவாயநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

பல்லவி

சிவாய நமவென்றே தெள்ளலைகள் பூசிக்க
சிவபூமி ஆய்த் திகழ்ந்த பூமி - இந்தத்
தேசத்தில் உயர்ந்தது எங்கள் சாமி

அனுபல்லவி

அபாயங் களைப் போக்கும் ஐந்து ஈஸ் வரங்களை
அழகாகக் கொண்ட தெங்கள் பூமி -இதன்
அழகென்றும் சொல்ல ஒண்ணாச் சேதி

ஒலிக்கூற்று

உப்புக் கடல் சூழ் ஒளிவீசும் முத்தாக
உலகினில் மிகப் பழைய தீவு - ஈழம்
ஒளி நாடாய்ப் புகழ்பெற்ற தீவு

இலங்கா புரி என்றும் ஈழநன் நாடென்றும்
இரத்தின துவீபம் என்றும்
இலங்கைத் தீவென்றும்,
ஜம்புகோளப் பட்டினம் என்றும்,
ஏழ் மலை நாடு என்றும்
நாக நாடென்றும்,நாக தேசம் என்றும்,
சேரன் தீ வென்றும்
செரண்டிப் என்றும், தம்ப பன்னி என்றும்,
சிலோன்என்றும், லங்கா என்றும்
ஸ்ரீலங் கா என்றும்
அழைக்கப் பட்ட தீவு - இது
சைவத் தமிழர் வாழ்ந்த தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணம்

**பாடல்**

எங்கும் சிவத் தலங்கள் எங்கும்திரு நீற்றின் ஒளி
எங்கும் அரோ கரா என்றிசைக்கும் கடல் அலைகள்
எங்கும் சிவன் அடியார் எங்கும் சிவ பூசை
எங்கும் சிவ மணமாய் இருந்தது எங்கள் பூமி

ஓம் சிவாய நம ஓம் சிவாய நம ஓம் சிவாய நம
ஓம் சிவாய நம ஓம் சிவாய நமஓம் சிவாய நம

**பாடல்**

முன்னேச் சரமென்றும், தொண்டீச் சரமென்றும்
கோணேச் சரமென்றும், நகுலேச் சரமென்றும்
கேதீச் சரமென்றும் கேடுகள் நீக்கிஅருள்
பஞ்சஈஸ் வரங்களால் பழைமை பெற்ற தெங்கள்பூமி -இந்தப்
பாருக்கெல் லாம் கடவுள் பரமசிவனே எங்கள் சாமி

**ஒலிக்கூற்று**

தமிழ் மூவா யிரம் என்னும்
பத்தாம் திரு முறையாம்
திருமந் திரம் தந்த திரு மூலர்
அமிழ்தான தமிழினில் அழகான இலங்கையை
சிவபூமி என்கிறார் கேளும்

## திரு மூலர்

**இராகம் :- நளினகாந்தி**

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுமுனை இவைசிவ பூமியாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிக்கூற்று

யோகியாகிய சிவபெருமானின் இடப்பக்க மூக்குத்துவாரம் (இடகலை), இலங்கை, வலப்பக்க மூக்குத்துவாரம் (பிங்கலை), தில்லைவனம் என்று அழைக்கப்படும் தமிழகத்திலுள்ள சிதம்பரம், நடுநாடி எனப்படும் சுழுமுனை மகாமேரு மலையாகும். இவை மூன்றும் சிவபூமிகளாகும்.

இலங்கை சிவபூமி

இலங்கை சிவபூமி

**இராகம் :- சிந்துபைரவி**

சிவ பூமி தன்னிலே சிறந்தநல் ஆலயம்

திருக்கேதீச் சரமாகும் சிவத் தலமாம்

அவமாயை தன்னிலே அழிவுறும் மாந்தர்க்கு

அடைக்கலம் தரும்தலம் கேதீச் சரம்.

## ஒலிக்கூற்று

சூதமுனிவர்

நைமிசாரண்ய வனத்து முனிவர்களுக்கு வியாசமுனிவரின் சீடரான சூத முனிவர், மாதோட்ட நகர் பற்றியும் திருக்கேதீச்சரம் பற்றியும் திருக்கேதீச்சர நாதரின் மகிமை பற்றியும் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

அகத்திய முனிவர்

அகத்திய முனிவர் இலங்கைக்கு வந்தபோது திருக்கேதீச்சர நாதரை வணங்கிச் சென்று இலங்கை அரசன் இராவணனைச் சந்தித்தார். அவனோடு வீணை இசைக்கும் (வாசிக்கும்) போட்டியில் ஈடுபட்டு திருக்கேதீச்சர நாதரின் திருவருளால் வெற்றி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவட்டா

துவட்டா தனது பாவம் நீங்கவும் தனக்கு மகன் பிறக்கவும் வேண்டி பூமிக்கு வந்து பாலாவியில் நீராடி திருக்கேதீச்சர நாதரை வழிபட்டார். துவட்டாவின் பக்திக்கு மகிழ்ந்த திருக்கேதீச்சரர் அவரது பாவங்களைப் போக்கி அவருக்கு ஒரு மகன் பிறக்க அருள் செய்தார். அந்த மகனே "தேவ கம்மியன்" என்றும் "தேவ தச்சன்" என்றும் அழைக்கப்படும் விஸ்வகர்மா.

விஸ்வ கர்மாவின் மகளான பதும கோமளை என்பவளை சூரபன்மன் திருமணம் செய்து கொண்டான். சூரபன்மனுக்கும், அவனது தம்பியர்களான சிங்கமுகாசுரன், தாரகாசுரன், ஆகியோருக்கும் முறையே வீர மகேந்திரபுரம், ஆசுர புரம், மாயாபுரம், ஆகிய அழகிய நகரங்களை அமைத்துக் கொடுத்தவர் இந்த விஸ்வகர்மா என்பவரே ஆவார்.

இந்த விஸ்வகர்மாதான் தனது தந்தை துவட்டாவுக்காக ஈஸ்வரர் அமர்ந்துள்ள இடத்தில் பாலாவிக் கரையில் ஒரு நகரை உருவாக்கி அதற்கு துவட்டா நகர் என்று பெயரிட்டார்.

பெரிய நகராக இருந்ததால் துவட்டா மாநகர் என்று அழைக்கப்பட்டு பின் மாதுவட்டா நகராகி அது மருவி மாதோட்ட நகராகியது என்பர்.

### திருக்கேதீச்சரர் ஆலயம்

**சூரியன் தோஷை தம்பதி மகனாம்**
**சொல்ல அரும் புகழ் துவஷ்டா**
**சீரிய முறையில் அமைத்திட வேண்டிட**
**துவட்டா மகன் விஸ்வகர்மா கோவில் அமைத்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவட்டா

தேவ சிற்பியே விஸ்வகர்மா கேளாய்!

தேவரும் மூவரும் யாவரும் போற்ற

சிறந்த நல் ஆலயம் அழகாய்ப் படைத்து

சீரிய உலகின் இன்பம் படைப்பாய்.

## விஸ்வகர்மா ஆலயம் அமைக்கும் காட்சி

### ஜதி

தத்தித் தாரித கிடஜம் தா

தரித்த தனதிமி தனத்த ஜொனுகிட

தத்தித் தாரித கிடஜம் தாம்

தகதித் தாரித கிடஜம் தெய்

தத்தித் தாரித தகதித் தாரித

தத்தித்தா தத்தித் தரிடைதொம்

விஸ்வகர்மா : தேவரும் மூவரும் யாவரும் போற்ற

துவஷ்டா நகரில் ஆலயம் அமைப்பேன்.

அழகும் அருளும் அமைந்த ஆலயம்

அற்புத மாகவே அழகாய் அமைப்பேன்

துவட்டா : ஆஹா அற்புதம் அழகுறு ஆலயம்

அகிலம் காக்கும் ஈசனே எழுந்தருள்வாய்

விஸ்வகர்மா : சிவாய நம வெனும் ஐந்தெழுத்து மந்திரம்

அகில மெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிக்கூற்று

துவட்டாவின் பெயரில் அமைந்த நகரம்
துவட்டா நகரம் ஆகியது – அதுபின்
மாபெரும் நகரம் ஆகியதாலே
மாதுவட்டா நகர் ஆகியது – அதுவே
மாதோட்ட நன்நகர் ஆகியது.

மயன் என்னும் தேவ தச்சன்தன் மகளாம்
மண்டோ தரிக்கென்று கோவில் கட்டி
மண்ணிலும் விண்ணிலும் புகழ் பெற்றான் – அவள்
மாவீரன் இராவணனை மணந்து கொண்டாள்

விஷ்வகர்மா வழி மயன் இந்த நகரத்தில்
விண்ணினைத் தொடும் ஒரு கோவில் செய்தான்
விஸ்வமாய் விளங்கும் ஈஸ்வரன் இங்கு
விருப்பமாய் வந்து அமர்ந்து கொண்டார்.

## காட்சி – 5
## மாதோட்டச் சிறப்பு

**இராகம் : பாகேஶ்ரீ** **தாளம் : ஆதி**

“இருங்கடற் கரையினில் எழில்திகழ் மாதோட்டம்,”
“உயர்தரு மாதோட்டம்,” “மறிகடல் மாதோட்டம்”.
“வாழை அம்பொழில் மந்திகள் களிப்புற”
“வண்டு பண்செய்யும்” மாமலர்ச் சோலை

மாமயில் நடமிடும் மானினம் வலம்வரும்
மாவும் காதலியும் நெருங்கும் மாதோட்டம்.
“மட்டுண்டு வண்டாடும் பொழில் மாதோட்டம் “
“மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டம்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம்"
"வையம் மலிகின்ற கடல் மாதோட்டம்"
"வரியசிறை வண்டுயாழ் செய்யும் மாதோட்டம்"
"வானத்துறு மலியும் கடல் மாதோட்டம்"

## ஆதிசேடன் வாயுபகவான் போட்டி

### ஒலிக்கூற்று

ஆயிரம் தலைகொண்ட ஆதிசேடன்(நாகம்) தானே பலவான் என்று இறுமாந்திருந்தான். வாயு பகவான் தானே பலவான் என்றான். ஒரு நாள் ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் இடையில் யார் பலவான் என்ற போட்டி ஏற்பட்டது.

### ஆதிசேடன் வருதல் (மகுடி இசை)

இராகம் : அடானா

### பாடல்

ஆயிரம் தலை கொண்ட ஆதிசேடன் என்போன்
பாம்புகளின் அரசன் பலத்திலே மேம்பட்டோன்.
தானே பலவான் என்றே தருக்குற்றான்
தலைக்கனம் கொண்டே இறுமாந் திருந்திட்டான்.

### வாயு பகவான்

(ஜதி) தத்தித் தககை ஜெம்தரி கிடதக தாம்த
ஜெம்த தத்தித் தாம்
தகதித் தககை ஜெம்தரி கிடதக தீம்த
ஜெம்த தித்தித் தெய்

தாம்த ஜெம்த தீம்த ஜெம்த
கிடதக தரிகிட தொம்
ததிங்கிண தொம்
தரிகிட தொம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : கானடா

## பாடல்

வாயு பகவான் வாயுக்களின் தலைவன்

தன்வலி பெரிதென்றான். தானே வலியன் என்றான்.

தன்னுடன் போட்டியிட வருவாய் என அழைத்தான்

தன்பலம் யாவையும் திரட்டியே தயாரானான்

## ஒலிக்கூற்று

ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் போட்டி ஆரம்பமானது. இருவரும் தத்தம் வலிமையைக் காட்டினர்.

## ஜதி

தாம் தாம் தனத்த தீம் தீம் ஜொனுத்த

தோம் தோம் தனத்த நம் நம் ஜொனுத்த

தாம் ஜொனுத்த தீம் ஜொனுத்த

தோம் ஜொனுத்த நம் ஜொனுத்த

ஜொனுத்த ஜொனுத்த ஜொனுத்த ஜொனுத்த

ஜொனுத்த திமி ஜொனுத்த திமி திமி ஜொனுத்த திமிதிமி

திரிகிட தாம்

ஜொனுத்த திமி தாம்

ஜொனுத்த திமி தாம்

ஜொனுத்த தரிகிடதொம்

## ஒலிக்கூற்று

இருவரும் போட்டியைத் தீர்மானித்தனர்.

இறங்கினர் இருவரும் தம்வலி காட்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: அடானா

### பாடல்

மகாமேரு மலையின் மாபெரும் சிகரங்களை

மறைத்தான் சேடன் ஆயிரம் தலைகளால்.

மூடி மறைத்த மகாமேருச் சிகரத்தை

முடிந்தால் விழுத்து என்றே அழைத்தான்.

இராகம் : கானடா

### பாடல்

முயன்றான் வாயு முழுவலி கொண்டு

மோதினான் சேடனை மூர்க்கமாய் வலியுடன்

தளர்ந்தான் சேடன் தடுக்க முடியவில்லை

தகர்ந்தன மூன்று சிகரங்கள் பறந்து.

### ஒலிக்கூற்று

மூன்றினில் ஒன்று இலங்கையில் விழுந்தது.

மாதோட்ட மாகி மகிமையிற் சிறந்தது.

இராகம் : ரீதி கௌளை

### பாடல்

ஆதலால் மேரு மலையினை அடைந்து

ஆதி சிவன்தனை வணங்கிடும் புண்ணியம்

மாதோட்டம் சென்று கேதீச் சரரை

வணங்கினால் கிட்டும். என்றே வணங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 6
## கேதீச்சரம்

குரல் : கேது பகவான் வழிபட்டதால் கேதீச்சரம்

(பாற்கடலை கடைந்த கதை)

### பாடல்

விப்பிர சித்தி சிம்மிகை மைந்தன்
காசிப முனிவரின் வழி வந்தோன்
கேது என்பான்சிவன் அருள்பெற்று – சாயாக்
கிரகம் எனும்பெரு நிலை பெற்றான்

### பாடல் 1

தேவா மிர்தம் பருகினால் தேகம்
அழியா திருக்கும் என்பதை அறிந்து
தேவரும் அசுரரும் முயற்சியில் இறங்கினர்

தேவ குருவாம் பிரகஸ் பதிஎனும்
வியாழ பகவானும், – சுக்கிராச் சாரியாம்
அசுர குருவும் ஆலோ சித்தனர்.

### பாடல் 2

பாற்கடல் தன்னைக் கடைந்தால் கிடைக்கும்
பருகிட லாம்அந்த அமுதம் என்றனர்.
தேவரும் அசுரரும் சேர்ந்தே கடைந்தால்
திரளும் அமுதம் என்றே கூறினார்

### பாடல் 3

ஏற்றனர் தேவர் ஏற்றனர் அசுரர்
எப்படிக் கடையலாம் என்றே கேட்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடல் 4

மந்தர மலையை மத்தெனக் கொண்டு
வாசுகிப் பாம்பைக் கடைகயி றாக்கி
பாற்கடல் தன்னைப் பக்குவ மாகக்
கடைந்தால் கிடைக்கும் அமிர்தம் என்றனர்

### ஒலிக்கூற்று

தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து மந்தரமலையை மத்தாக பாற்கடலின் நடுவே நிறுத்தி வாசுகி என்ற பாம்பைக் கடைகயிறாகப் பொருத்தி இரண்டு பக்கங்களிலும் நின்று இழுத்து இழுத்து பாற்கடலைக் கடைந்தனர்

**(பாற்கடலைக் கடையும் காட்சி)**

### பாடல் 5

தேவரும் அசுரரும் எதிரெதிர் நின்று
சேர்ந்தே கடைந்தனர் ஒற்றுமையாக
கடைந்தனர் கடைந்தனர் பாற்கடல் தன்னைக்
கடைந்தனர் கடைந்தனர் ஒற்றுமை யாக

### பாடல் 6

வாசுகிப் பாம்பு வருத்தம் பொறாது
விசத்தைக் கக்கினாள் - ஆலகால
விசத்தைக் கக்கினாள்

### பாடல் 7

தேவரும் அசுரரும் பயந்தே ஓடினர்
சிவபெரு மானிடம் அடைக்கலம் கேட்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 8

அபயம் கொடுத்த அரனார் தமது
தோழர்சுந் தரரை அனுப்பினார் அங்கே
ஆல கால விசத்தை அடக்கி
சுந்தரர் பாத்திரம் ஒன்றில் கொணர்ந்தார்.

## பாடல் 9

வெளியிலே விட்டால் விசத்தால் இந்த
விண்ணும் மண்ணும் அழியும் என்பதால்
கரத்திலே வாங்கிய கருணைக் கடலோ
கடும்விஷம் தன்னைத் தானே குடித்தார்

## பாடல் 10

கண்டாள் உமையாள் கவலைகொண் டோடிக்
கழுத்தினைக் கையால் பிடித்தே தடுத்தாள்
கழுத்திலே விசமும் தங்கிக் கொண்டது
கால காலனை விஷம்என்ன செய்யும்.

## பாடல் 11

கண்டத்தில் விசத்தை அடக்கிய தாலே
நீல கண்டன் எனும்பெயர் பெற்றார்.

## பாடல் 12

நீல கண்டன் திரு நீலகண்டன்
நிகரிலாக் கடவுள் நீலகண்டன்

## பாடல் 13

மகிழ்ந்தனர் தேவர் மகிழ்ந்தனர் அசுரர்
புகழ்ந்தனர் சிவனைப் போற்றிப் பாடினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடல் 14

ஓம் சிவாய நம ஓம்
ஓம் சிவாய நம ஓம்
அரகர மகாதேவா அரகர மகாதேவா!

### பாடல் 15

மந்தர மலையை மறுபடி இழுத்தனர்
இந்திரன் முதலாம் தேவரும் அசுரரும்,
ஒற்றுமை யாகக் கடைந்தனர் கடலை
ஓங்கியே எழுந்தது அமிர்தம் அங்கே
(பாற்கடலைக் கடையும் காட்சி)

### பாடல் 16

அமுதம் அமுதம் அமுதம்
அமுதம் அமுதம் அமுதம்
அமுதம் தோன்றிட ஆர்ப்பரித் தனரே
அதனைப் பருகிட அனைவரும் முந்தினர்

### பாடல் 17

அசுரர்கள் குடிப்பதை விரும்பிடாத் தேவர்
அதற்கொரு வழியை உடனே செய்தனர்
அழகிய பெண்ணாய் மோகினி வடிவாய்
அச்சுதக் கடவுள் அங்கே தோன்றினார்

### ஒலிக்கூற்று

அசுரர்கள் மோகினியைக் கண்டு
அவள்மேல் தீரா மோகம் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 18

மோகினி எனக்கு, மோகினி எனக்கு.

மோகினி எனக்கு, மோகினி எனக்கு

## பாடல் 19

பெண் மோகத்தால் அசுரர்கள் பகைத்தனர்

பித்தர்க ளாகிப் பெரும்போர் புரிந்தனர்

மோகினி பின்னே சென்ற அசுரர்கள்

மோதினர் தமக்குள் அமுதத்தை மறந்தனர்

**(அசுரர்கள் தங்களுக்குள் சண்டை போடும் காட்சி)**

## பாடல் 20

அசுரர் களுக்குப் போக்குக் காட்டிய

அழகிய மோகினி அமிர்தம் பகிர்ந்தாள்.

தேவர்கள் வரிசையாய் வந்தனர் அவர்க்கு

தேவி மோகினி அமிர்தம் கொடுத்தாள்

## பாடல் 21

தேவர்கள் வரிசையில் அசுரன் ஒருவன்

தேவர்கள் போன்ற வடிவினில் நின்றான்

## பாடல் 22

விப்பிர சித்தி சிம்மிகை மைந்தன்

தாமசன் என்பான் அமிர்தம் பருகினான்.

## பாடல் 23

சந்திர சூரியர் அவனைக் கண்டு

சாடையால் அவனைக் காட்டிக் கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடல் 24

அகப்பையால் மோகினி அவனை வெட்டினாள்
அவன்இரு துண்டாய் நிலத்தில் விழுந்தான்
அமிர்தம் குடித்ததால் அழியா திருந்தான்
அவ்விரு துண்டும் பாம்புகள் ஆயின

### பாடல் 25

தலையின் பாகம் இராகு, - மூத்தவன்
வாலின் பாகம் கேது - இளையவன்

### பாடல் 26

கேதுதன் ஊனம் போக்க நினைத்து
மாதொரு பாகனை வணங்கிட வந்தான்
மாதோட் டத்துப் பாலாவித் தீர்த்த
மகிமை அறிந்து மகிழ்ந்தே மூழ்கினான்

### கேது

ஈஸ்வரா எனது ஊனம் போக்குவாய்
எனக்காய் உனது மனம் இரங்குவாய்
தவறினைச் செய்தேன் தண்டனை பெற்றேன்
தயாபரனே என்னைக் காத்தருள் வாய்

**(கேது தவம் செய்யும் காட்சி)**

### பாடல்

கேது : மாதொரு பாகனே போற்றி
மாயையை நீக்கும் ஐயனே போற்றி
பாலாவித் தீர்த்தக் கரையோனே போற்றி
பாப வினையகற்றும் வள்ளலே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவாய நம, ஓம் சிவாய நம
ஓம் சிவாய நம, ஓம் சிவாய நம

### பாடல் 27

ஊனம் நீங்கிட உமையொரு பாகனை
உள்ளத் திருத்தி வழிபா டாற்றினான்
கிரகம் என்னும் நிலையை அடைந்தான்
கீழ்மை நீங்கி, ஞான காரகனானான்

### கேது, வசனம்

ஆகா அற்புதம்! அற்புதம்! ஐயனே அற்புதம்!
ஈசனே உமை மண வாளனே போற்றி!போற்றி!

### பாடல்

கேது : ஊனம் நீங்கினேன் உள்ளம் உருகினேன்
ஞானம் பெற்றேன். கிரக நிலைஅடைந்தேன்

### பாடல் 28

கேது ஈஸ்வரனை வழிபட்ட இடமே
கேதீச் சரமாய்ப் புகழ்பெற்ற தலமாம்.

### பாடல் 29

இராகு கேது கிரக தோஷம்
இல்லா தொழிய விரும்புவோர் வந்து
பாலாவி தன்னில் மூழ்கி எழுந்து
பரமனை வணங்கி அருளினைப் பெற்றார்.

கேது ஈஸ்வரனின் அருள்பெற்ற தாலே
கேதீஸ்வரன் எனும் பெயர் பெற்றார் - ஈசர்
கேதீஸ் வரர் என்னும் பெயர் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 7
## தேவாரத்தில் மாதோட்டச் சிறப்பு

**இராகம்: பாகேஶ்ரீ** **தாளம்: ஆதி**

மாதோட்டம் : "இருங்கடற் கரையினில் எழில் திகழ் மாதோட்டம்"

"உயர்தரு மாதோட்டம்"

"மறிகடல் மாதோட்டம்" "மலிகடல் மாதோட்டம்"

"வாழை அம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டம்:"

"வண்டு பண் செயும் மாமலர்ப் பொழில்
மஞ்சை நடமிடும் மாதோட்டம்"

"கடல்வாய்ப் பொன் இலங்கிய முத்துமா
மணிகளும் பொருந்திய மாதோட்டம்"

"மாவும் பூகமும் கதலியும் நெருங்கு
மாதோட்டம்" (பூகம் – கமுகு)

"மாடெலாம் மண முரசெனக் கடலின
ஒலிகவர் மாதோட்டம்" (பக்கங்களிலெல்லாம் திருமண முரசு ஒலிப்பதைப்போல கடலின் ஒலி பரந்து கவர்ந்துள்ள மாதோட்டம்)

"வையம் மலி கின்ற கடல் மாதோட்டம்"
(கப்பல்கள் வந்து நிறைகின்ற பெருந்துறைக் கடல் கொண்ட மாதோட்டம்)

"வங்கம் மலி கின்றகடல் மாதோட்டம்"
(வங்கம்–கப்பல்)

"வரிய சிறை வண்டி யாழ் செயும் மாதோட்டம்"

"வானத் துறு மலியும் கடல் மாதோட்டம்"

("முத்துக்களை ஈனுகின்ற ஒளிவீசும் சங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டி நெருங்கிக் கிடக்கும் மாதோட்டம்."

"மட்டுண்டு வண் டாடும்பொழில் மாதோட்டம்"

(தேனுண்ட வண்டுகள் மகிழ்ந்தாடும் சோலை சூழ் மாதோட்டம்)

"மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டம்"

"கறையார் கடல் சூழ்ந்த கழி மாதோட்டம்."

(கப்பல்களில் வரும் வெளிநாட்டு வியாபாரிகள் பண்டமாற்று வியாபாரம் செய்தல். முத்து, மாணிக்கம் இரத்தினம், பவளம் முதலான வியாபாரம் நடைபெறும், காட்சி)

### பாடல்

மாதோட்டம் நல்ல மாதோட்டம்
மாதோட்டம் நல்ல மாதோட்டம்
மன்னாரின் மாந்தையிலே
மாநகராய் அமர்ந்திருந்த மாதோட்டம்

பாலாவிக் கரையினிலே
பார்போற்ற அமைந்திருக்கும் மாதோட்டம்
நாலாயிரம் பிறவி
நாம்செய்த பாவம்போக்கும் மாதோட்டம்

### வேறு

கேதுவந்து வழிபட்ட மாதோட்டம் – ஈசர்
கேதீச்சரர் ஆனதலம் மாதோட்டம்
யாதுகுறை இருந்தாலும் வந்தடைந்தால் – கேதீச்சர்
யாவும்நீக்கி அருள்புரியும் மாதோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச் சரர்அமர்ந்த மாதோட்டம் - எல்லாத்
தீமைகளும் போக்குமிடம் மாதோட்டம்
இருக்கும் இடம்தேடி யாவும்வரும் - ஈசரை
இங்குவழி பட்டால்போகும் மனவாட்டம்

### வேறு

ஈழத்தின் வடக்கினிலே இருக்கும் மன்னாரினிலே
எழில்மிகும் மாந்தையிலே அமைந்தது மாதோட்டம்
பாலாவிக் கரையினிலே பரம்பொருளாம் கேதீச்சர்
பார்புகழ வீற்றிருந்து அருளு கின்றார்

### வேறு

மகாதுவட்டா அமைத்த நகர் மாதோட்டம் - நல்ல
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டம்
வாகான கௌரியம்மை அருகிருக்க - கேதீசர்
பாலாவிக் கரையமர்ந்த மாதோட்டம்

### வேறு

கௌரியம்மை சமேதராகக் கடவுளாம் சிவபெருமான்
கேதீச்சரர் எனும்பெயரில் கோவில் கொண்டார்
சௌந்தர்யம் பெறலாம் சகலபோகமும் பெறலாம்
தாமதம் வேண்டாம்வந்து அருள் பெறுங்கள்

### ஒலிக்கூற்று

வன்னியின் மன்னார் மாவட்டத்து மாந்தைப் பிரிவில்
பாலாவிக் கரையில் அமைந்தது மாதோட்டம்.
**கௌரி அம்மை சமேதராய் திருக்கேதீச்சர நாதர் அங்கு கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள்
## (திருவாசகம் - குயில்ப்பத்து)

திருச்சிற்றம்பலம்

"கீதம் இனிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில்
பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணமொன்றும் இல்லான்
அந்தம் இலான்வரக் கூவாய்

ஏர்தரும் ஏழுல கேத்த
எவ்வுரு வுந்தன் உருவாய்
**ஆர்கலி சூழ்தென் இலங்கை**
**அழகமர் வண்டோதரிக்கு**
**பேரருள் இன்பம் அளித்த**
**பெருந்துறை மேய பிரானைச்**
சீரிய வாயாற் குயிலே
தென்பாண்டி நாடனைக் கூவாய்

### பாடல்

வண்டோதரி என்று வாயாரப் பாடினார்
வாசகர் செந்தமிழ்ப் பாடலிலே - மணி
வாசகர் குயில்ப் பத்துப் பாடலிலே.
வண்டமர் ஓதியை வண்டோதரி என்றார்
மண்டோதரி என்றே மருவிற்று அப்பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோ தரிக்கு ஒரு விசித்திர ஆசை
மனதினில் உதித்தது அதை நினைத்து
கேதீச்சரத்து நாதனைத் தொழுதாள்
கேதீச்சரத்து நாதனைத் தொழுதாள்

மண்டோதரி : குழந்தையாய் உன்னைக் கண்டிட விரும்பினேன்
கேதீச் சரத்துப் பெருமானே - திருக்
கேதீச்சரத்துப் பெருமானே.
குறையினைத் தீர்ப்பாய்
குறையினைத் தீர்ப்பாய்
கும்பிட்டேன் உன்னைப் பெருமானே

பாடல் : பெருந்துறை யான துறைமுக நகராம்
மாதோட்ட நகரில் கோவில் கொண்ட
அருந்துணை யான கேதீஸ் வரனின்
அருள் பெற்றாள் ஒருநாள் மண்டோதரி
சிவபெரு மானே ஒருநாள் அவளுக்குக்
குழந்தை வடிவிலே காட்சி தந்தார்.

(சிவபெருமான் குழந்தைவடிவில் காட்சிதரல். மண்டோதரி மனம் மகிழல் - காட்சி)

## காட்சி – 8

### ஒலிக்கூற்று

பிரம்மதேவனின் மகனான புலஸ்தியரின் மகன் விச்ரவசு. அவனது மகன் இராவணன். ஸ்ரீஇராமன் அந்தணனின் மகனான இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்ம ஹத்தி தோஷம் நீங்க திருக்கேதீஸ்வரம் வந்து பாலாவியில் நீராடி பரிகாரம் செய்து திருக்கேதீச்சர நாதனை வழிபட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : கர்நாடக சுத்த சவேரி

இலங்கை வேந்தன் இராவணனை
சம்ஹாரம் செய்த இராமபிரான்
பிரம்ம ஹத்தி தோஷம் நீங்க
பாலாவித் தீர்த்தத்தில் பரிகாரம் செய்தார்.

(இராமன், சீதை, இலட்சுமணன், அனுமான் முதலானோர் பாலாவித் தீர்த்தத்தில் மூழ்கி எழுந்து சிவபெருமானுக்குரிய பூசையை சிவலிங்கத்தில் செய்தல்.– காட்சி)

இராமர் : ஓம் நமச்சிவாய ஓம் நமச்சிவாய
ஓம் நமச்சிவாய ஓம் நமச்சிவாய

## காட்சி – 9
## ஒலிக்கூற்று

கி.மு 6 ஆம் நூற்றாண்டில் பாரத தேசத்தின் கலிங்க நாட்டு இளவரசன் விஜயன், தன் தோழர்களோடும் உபதிஸ்ஸ என்ற அந்தணரோடும், மாதோட்டத் துறைமுகத்திற்கு வந்து திருக்கேதீச்சுரர் ஆலயத்தில் சிவபூசை செய்தான். பின்பு கோயில்த் திருப்பணியையும் செய்தான்.

இராகம் : பூர்வகல்யாணி

விஜயன் எனும் நாமங்கொண்ட கலிங்க தேசத்து
அரசிளஞ்குமரன் உபதிஸ்ஸ என்ற அந்தணரோடு
கேதீச்சரம் வந்து சிவ பூசை செய்தான்
திருப்பணி செய்து திருவருள் பெற்றான்

(விஜயன் தோழர்களோடும், உபதிஸ்ஸ என்ற அந்தணரோடும் குதிரையில் வருதல், சிவலிங்க பூசை செய்தல்)

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 10

## சேக்கிழார் சுவாமிகள்

## (திருத்தொண்டர் புராணம் – பெரியபுராணம்)

திருச்சிற்றம்பலம்

சேதுவின்கண் செங்கண்மால் பூசை செய்த
சிவபெருமான் தனைப்பாடிப் பணிந்து போந்து
காதலுடன் அந்நகரில் இனிது மேவிக்
கண்ணுதலான் திருத்தொண்ட ரானார்க் கெல்லாம்
கோதில்புகழ்ப் பாண்டிமா தேவி யார்மெய்க்
குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச் செல்ல
நாதர்தமை நாடோறும் வணங்கி ஏத்தி
நளிர்வேலைக் கரையில் நயந் திருந்தா ரன்றே

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை உற்றார்

### பாடல்

கூன்பாண் டியனது கூனையும் நோயையும்
குறைவின்றி நீக்கிய சம்பந்தர்
வான்புகழ் சைவத்தை பாண்டிய நாட்டிலே
வலுவாக நிறுத்தினார் வாழ்கஅவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதுவின் கரையிலே இராமபிரான் அன்று
சிவனை வழிபட்ட ஈஸ்வரனை
இராமேஸ் வரன்என்பார், அவ்வூர் இன்றும்
இராமேஸ்வரம் என்றே புகழ் கொண்டது.

நின்றசீர் நெடுமாறன் எனும்பெயர் பெற்ற
கூன் பாண்டியனோடும், சோழர் தங்கள்
குலக்கொடி மங்கையர்க் கரசியார் மற்றும்
குலச்சிறையார் எனும் அமைச்சருடன்

அவ்விடம் வந்த சம்பந்தப் பிள்ளையார்
அரனாரைப் பாடியே வணங்கி நின்றார்.
அவ்விடத் திருந்து ஈழத்துக் கேதீஸ்வரர்
ஆலயத் தழகைக் கண்டுகொண்டார்

விண்ணினைத் தொடும்மாடக் கோபுரம் கொண்ட
மாதோட்டத் தண்ணலை மகிழ்ந்து கண்டார்.
பொங்கி எழும் பெரும் காதலினாலே
போற்றியே பதிகம் பாடிநின்றார்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞான சம்பந்தர் தேவாரம்

### (இரண்டாம் திருமுறை)

**பண் : நட்டராகம்**

**இராகம் : பந்துவராளி** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி எந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை அடையாவே.

விருது குன்றமா மேருவில் - மகாமேருமலை வில். நாண் அரவா - வாசுகி என்ற பாம்பு அவ்வில்லில் பூட்டிய நாணாக, அனல் எரி அம்பா - அக்கினி பகவான் அம்பாக, (திருமால் அம்பாகவும் அக்கினி பகவான் அம்பின் நுனியாகவும் இருந்தனர் என்று புராணங்கள் சொல்கின்றன.) பொருது- யுத்தம் செய்து, மூ எயில் - மும் மதில்கள், (முப்புரங்கள் என்பர்) செற்றவன் - அழித்தவன், கனை கடல் - ஒலிக்கின்ற கடல், கடி கமழ் பொழிலணி மாதோட்டம். வாசனை வீசுகின்ற பூஞ்சோலைகளால் அழகு விளங்கும் மாதோட்டம்) .

**பாடல்**

**சம்பந்தர் பாடலில் மகிழ்ந்த சிவனார்**
**சற்றும் குறையாப்பொற் கிழி கொடுத்தார்**
**உலவாக் கிழி பெற்ற சம்பந்தர் பாடலை**
**உலகோர் புகழ்ந்தனர் பாடி மகிழ்ந்தனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(சிவபெருமான் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்குப் பொற்கிழி கொடுக்கும் காட்சி)**

உலாவாக்கிழி - அள்ள அள்ளக் குறையாத பொற்காசுகள் கொண்ட பொன்முடிப்பு

## காட்சி – 11

## பாலாவித் தீர்த்தத்தின் சிறப்பு

### ஒலிக்கூற்று

பாலாவித் தீர்த்தம் பற்றி சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார்.

"பரிய திரை எறியவரு பாலாவி"

**இராகம் : அமிர்தவர்ஷினி**

**பல்லவி**

பாவங்களைக் கழுவும் பாலாவி - செய்த
பாவவினை களையும் பாலாவி

**அனுபல்லவி**

தேவர்களும் விரும்பும் பாலாவி - நல்ல
திருப்பெருந் துறைசேர் பாலாவி

**சரணம்**

மாதோட்ட நகரினிலே கௌரியம்மை
மாதுடன் ஈஸ்வரனார் அமர்ந்திருக்க
மாதுயர் போக்கும்கௌரி தீர்த்தமென
மாநிலத்தில் புகழ்பெற்ற பாலாவி

பிதிர்க்கடன் ஆற்றுபவர் மூழ்கிஎழ
பேரருள் செய்வதிந்தப் பாலாவி
நதிக்கரை ஆகிப்பால் நிறத்தினிலே
நறும்புனல் நுரைகொண்ட பாலாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாவிக் கரையினிலே உயிர்பிரிந்தால்
பரம சிவன்வந்து அருள்புரிவார்
காலா காலமெல்லாம் சிவனருளைக்
கண்டுஉயிர் பேரின்ப முத்திபெறும்

### ஒலிக்கூற்று

வன்னியின் மன்னார் மாவட்டத்து மாந்தைப் பிரிவில் பாலாவிக் கரையில் அமைந்தது மாதோட்டம். கௌரி அம்பிகை சமேதராய் திருக்கேதீச்சர நாதர் அங்கு கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார்

### ஒலிக்கூற்று

சுந்தர மூர்த்தி நாயனார் தனது தோழர் சேரமான் பெருமாள் நாயனாருடன் இராமேஸ்வரம் வருகின்றார். இராமேஸ்வரப் பெருமானாகிய சிவபெருமானை வணங்கி அங்கிருந்து திருக்கேதீச்சரப் பெருமானை வாழ்த்தி வணங்கி வழிபடுகிறார்.

(சுந்தர மூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனாருடன் இராமேஸ்வரம் வந்து அங்கிருந்து திருக்கேதீச்சர நாதரை வணங்கும் காட்சி)

### பாடல்

சுந்தர மூர்த்தி சுவாமிகள் தனது
தோழர் சேரமான் பெருமாளுடன்
வந்தவர் இராமேஸ் வரத்தினை வணங்கி
வழிபட் டார் திருக் கேதீச்சரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கி
பண்ணுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார், பாம்பணிந்த
சென்னியர்மா **தோட்டத்துத் திருக்கேதீச் சரம்**சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார்.

**( சேக்கிழார் சுவாமிகள் - காட்சி )**

## சுந்தர மூர்த்தி நாயனார் தேவாரம்.

(ஏழாம் திருமுறை,)

**பண் : நட்ட பாடை**

திருச்சிற்றம்பலம்

நத்தார் படை ஞானன் பசு
ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மத யானை உரி
போர்த்த மணவாளன்
பத்தா கிய தொண்டர் தொழு
பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான் திருக்
கேதீச் சரத்தானே

மூவ ரென இருவ ரென
முக்கண் ணுடைமூர்த்தி
மாவின் கனி தூங்கும் பொழில்
மாதோட்ட நன்னகரில்
பாவம் வினை அறுப்பார் பயில்
பாலாவியின் கரைமேல்
தேவன் எனை ஆழ்வான் திருக்
கேதீச் சரத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறையார் கடல் சூழ்ந்த கழி
மாதோட்ட நன்னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ் செயுங்
கேதீச் சரத்தானை
மறையார் புகழ் ஊரன் அடித்
தொண்டன் உரைசெய்த
குறையாத் தமிழ் பத்தும் சொலக்
கூடா கொடுவினையே

(நத்தார் படை ஞானன் பசு ஏறி - நத்து ஆர் படைஞானன் பசு ஏறி, சங்கைச் சிறந்த படைக்கலமாகக் கொண்ட மகாவிஷ்ணு மூர்த்தியாகிய இடபத்தை வாகனமாகக் கொள்பவர். நனை கவிழ் வாய் மத்தம் மத யானை உரி போர்த்த மணவாளன். - நன்றாகக் கவிழ்ந்த வாயினையுடைய மிகுந்த மதங்கொண்ட யானையை உரித்து அதன் தோலை தன் உடம்பில் போர்த்திய நித்திய மணவாளர். செத்தார் எலும்பு அணிவான் - இறந்துபோன பிரம்ம விஷ்ணுக்களின் தலையோடுகளையும் எலும்புகளையும் மாலையாக அணிபவன்)

## திருக்கேதீச்சரம்
## திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

"கேடி லாத கே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினை தானே"
"அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே"
"அடிகள் ஆதரித் திருந்த கேதீச்சரம்"
"எல்லை யில்புகழ் எந்தை கேதீச்சரம்"
"தொண்டர் நாள்தொறும் துதிசெய்ய அருள் செய் கேதீச்சரம்"
"துன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சு கேதீச்சரம்"
"அத்தர் மன்னு பாலாவியின் கரையில்
கேதீச்சரம் அடைமின்னே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரர்

"தெங்கம் பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சரம்"
"சிறையார் பொழில் வண்டி யாழ் செய்யும் கேதீச்சரம்"

## பாடல்

கேதீச்சரம் - கேதீச்சரம் - திருக் கேதீச்சரம்

கேடுகள் அகற்றும் பதி கேதீச்சரம் - மனக்
கேவலங்கள் போக்கும்பதி கேதீச்சரம்
பாடுகின்ற அலையின் ஒலி கேதீச்சரம் - எங்கும்
பாலாவி எழுப்புமிசை கேதீச்சரம்

மாதோட்டம் எனும் நகரில் கேதீச்சரம் - இந்த
மாநிலத்தின் காவலதாய்க் கேதீச்சரம்
மாதோடு பாகமதாய் கேதீச் சரர்- என்றும்
மனம்மகிழ்ந்து காட்சிதரும் கேதீச்சரம்

மண்டோ தரிக்கு அருள் கேதீச்சரம் - புகழ்
மண்டிக் கிடக்கும்பதி கேதீச்சரம்
கொண்டே கௌரியம்மை இடப் பாகமாய் - இருக்கக்
கோலோச்சி அரசாளும் கேதீச்சரம்

## வேறு

சுந்தரத் தமிழெடுத்துச் சுந்தரர் பாடிநின்ற
சுந்தரம் நிறைந்தபதி கேதீச்சரம்
சம்பந்தர் பக்தியிலே சந்ததமும் வணங்குகின்ற
சம்பந்தம் பெற்றபதி கேதீச்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பரும் சேக்கிழாரும் வாசகரும் வணங்கிநின்ற
அற்புதம் நிறைந்தபதி கேதீச்சரம்
எப்பொழுது யாவர்சென்று ஏத்திவழி பட்டிடினும்
இன்பமுற வாழவைக்கும் கேதீச்சரம்

## திருக்கேதீச்சரர்
## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்
## 2ம் திருமுறை

பண்: நட்டராகம்

இராகம் : பூபாலம் தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தார்
ஈட மாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் **மாதோட்டம்**
கேடிலாத **கேதீச்சரம்** கைதொழக்
கெடுமிடர் வினைதானே

### ஒலிக்கூற்று

வீணையை வாசிப்பவர், பலபல கதைகளுக்கும் சொந்தக்காரர், காளைமாட்டைவாகனமாகக்கொண்டவர். ஐந்தொழில்களையும் குறிக்கும் அரிய நடனத்தை ஆடுபவர், தேவர்கள் முறையிட ஆலகால விசத்தை உட்கொண்டு அதனால் இருண்ட கரிய திருக் கண்டத்தைக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடெ லாமண முரசெனக் கடலின
தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல் கேதீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு வார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே

பெண்ணோர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையின் உழல்பவர்.
-----------------------------------------

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்.
-----------------------------------------

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
-----------------------------------------

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
-----------------------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேழல் வெண் மருப் பணிந்தநீண் மார்பர்

**கேதீச்சரம்** பிரியாரே

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்

லுலகினி லுயிர்வாழ்க்கை

கண்ட நாதனார்

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்

தெடுத்தவன் முடிதிண்தோள்

தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்

தலைவனார்

பூவு ளானும்மப் பொருகடல் வண்ணனும்

புவியிடந் தெழுந்தோடி

மேவி நாடிநின் அடியிணை காண்கிலா

வித்தக மென்னாகும்

---

தேவி தன்னொடும் திருந்து **கேதீச்சரத்**

திருந்தவெம் பெருமானே

மத்த யானையை மறுகிட உரிசெய்து

போர்த்தவர் **மாதோட்டத்**

தத்தர் மன்னு**பா லாவியின்** கரையிற்

**கேதீச்சர** மடைமின்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுந்தரர்**

சுடுவார் பொடி நீறும் நல்ல
துண்டப் பிறைக்கீளுங்
கடமார் களி யானையுரி
யணிந்த கறைக்கண்டன்

---

அங்கம் மொழி யன்னா ரவர்
அமரர் தொழுதேத்த
வங்கம் மலி கின்ற கடல்
**மாதோட்ட நன்னகரிற்**
பங்கஞ் செய்த பிறை சூடினன்
**பாலாவியின் கரைமேல்**
செங்கண் ணர வசைத்தான் **திருக்**
**கேதீச் சரத்தானே**

கரிய கறைக் கண்டன் நல்ல
கண்மே லொருகண்ணன்
வரிய சிறை வண்டியாழ் செயும்
**மாதோட்ட நன்னகருள்**
பரிய திரை எறியவரு
**பாலா**வியின் கரைமேற்
தெரியும் மறை வல்லான் **திருக்**
**கேதீச் சரத் தானே**

வெய்ய வினை யாய அடி
யார்மே லொழித்தருளி
வையம் மலி கின்ற கடல்
**மாதோட்ட நன்னகரிற்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையே ரிடை மடவா ளொடு

**பாலாவி**யின் கரைமேற்

செய்ய சடை முடியான் **திருக்**

**கேதீச் சரத்தானே**

---

பானத் துறு மொழியா ளொடு

**பாலாவி**யின் கரைமேல்

ஏனத் தெயி றணிந்தான் **திருக்**

**கேதீச் சரத்தானே**

அட்டன் அழ காக அரை

தன்மேல் அரவார்த்து

---

பட்ட வரி நுதலா ளொடு

**பாலாவி**யின் கரைமேல்

சிட்டன் நமை ஆள்வான் **திருக்**

**கேதீச் சரத்தானே**

---

மூவ ரென இருவ ரென

முக்கண் ணுடைமூர்த்தி

மாவின் கனி தூங்கும் பொழில்

**மாதோட்ட நன்னகரில்**

பாவம் வினை அறுப்பார் பயில்

**பாலாவி**யின் கரை மேல்

தேவன் எனை ஆள்வான் **திருக்**

**கேதீச் சரத் தானே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிக்கூற்று

திருக்கீதேச்சர நாதரை திருநாவுக்கரசு சுவாமிகளும் தமது தேவாரத்தில் பாடியுள்ளார்.

**( திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் பாடும் காட்சி)**

## திருநாவுக்கரசு நாயனார்

(திருத்தாண்டகம் - ஆறாம் திருமுறை

தலம்- திருவீழி மிழலை)

திருச்சிற்றம்பலம்

பூதியணி பொன் நிறத்தார் பூண நூலார்
        பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
**கேதீசுரம்** மேவினார் கேதாரத் தார்
        கெடில வடஅதிகை வீரட் டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
        மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
        வீழி மிழலையே மேவி னாரே

**பாடல்**

எண்ண எண்ண இனிக்கின்றார் எங்கள் திருக் கேதீச்சரர்
எண்ண மெல்லாம் நிறைகின்றார் எங்கள் திருக் கேதீச்சரர்
வண்ண வண்ணக் கோபுரமாய் வடி வழகுக் கோவிலிலே
உண்ண உண்ணத் திகட்டாத ஒரு மருந்தாய் உறைகின்றார்
(எண்ண......)

காலாதி கால மாகக் காக்கும் சிவ பெருமானார்
ஆலால முண்ட கண்டர் அடியவரைக் காக்கும் தொண்டர்
பாலாவிக் கரை யினிலே பார்வதியாம் கௌரி யோடு
பல்லாண்டு வாழு கின்றார் பாரையெல்லாம் ஆளு கின்றார்
(எண்ண......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருவேற்று முப் புரங்கள் சிதற வழி செய்திட்டவர்
வருமேற்றை வாக னமாய் வாகாய் ஏறி அமர்ந்திட்டவர்
திருநீற்றின் ஒளி விளங்க சிவசைவ நெறி துலங்க
திருக்கேதீச் சரத் தினிலே சிவ பெருமான் வாழ்கின்றார்
(எண்ண.....)

மாதோட்ட நன்நகரில் மாந்தை என்னும் பிரிவினிலே
தேரோட்டம் பார்க்க வென்று தேவரெல்லாம் வருகின்றார்
நாமோட்ட மாகச்சென்று நமக்கருள் செய்க வென்று
வாதாட்ட மாகக்கேட்டு வணங்கிமுந்தி அருள் பெறுவோம்
(எண்ண.....)

### ஒலிக்கூற்று

தென்கயிலை நாதன், ஈழக் கயிலை நாதன், திருக்கேது நாதர், நித்திய மணவாளர், கௌரி நாதர், நாக நாதர், மாதோட்ட மருந்து, முதலான பெயர்களில் அழைக்கப்பட்ட திருக்கேதீச்சர நாதர் ஆலயமும் மாதோட்ட நன் நகரும், பாலாவித் தீர்த்தமும் இராவணேஸ்வரன் காலத்திலிருந்து சிறப்போடு விளங்கின. இராமபிரான், விஜயன் ஆகியோர் மாதோட்டத்துறைமுகம் ஊடாகவே இலங்கைக்கு வந்தனர் என்று சொல்லப்படுகின்றது.

விஜயன் தனது தோழர்களும் தானும் மணம் புரிய பாண்டி நாடு சென்றதும் மணம் முடித்துத் திரும்பி வந்ததும் இத்துறை முகத்தூடாகவே என்றும் சொல்லப்படுகின்றது. இராஜ இராஜ சோழன் முதலானோர் மாதோட்டம் ஊடாகவே இலங்கைக்கு வந்தனர் என்றும் சொல்கிறார்கள். இராஜ இராஜ சோழபுரம், இராஜ இராஜபுரம், இராஜ இராஜேச்சரம், என்றும் மாதோட்டப் பகுதி அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. திருக்கேதீச்சர நாதரை "ராஜ ராஜேச்சரத்து மகாதேவர்" என்றும் அழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 12

### ஒலிக்கூற்று

மும்முடிச் சோழன் என்னும் சோழச் சக்கரவர்த்தியாகிய ராஜ ராஜசோழன் இலங்கையின் பொலநறுவையில் ஆட்சியமைத்த காலத்தில் இலங்கையின் இராஜப் பிரதிநிதியாகப் பொறுப்பி லிருந்த அவன் மகன் ராஜேந்திர சோழன் திருக்கேதீச்சரம் கோவிலை அழகான கோவிலாக ஒளிரச் செய்தான். அப்போது இக்கோவில் ராஜ ராஜ மகாதேவர் கோவில் என்னும் சிறப்புப் பெயர் பெற்றது.

அக்காலத்தில் திருக்கேதீச்சரப் பகுதி, **கோயில் நகரம்** என அழைக்கப்பட்டது. இராஜேந்திர சோழன் தனது தந்தையின் பெயரில் "அருள்மொழித்தேவன் வளநாடு" என இப்பகுதியை அழைத்தான்.

### சோழர் கோவில் கட்டும் காட்சி

ராஜ ராஜ மகாதேவர் கோவில் வாழ்க!
ராஜ ராஜ மகாதேவர் கோவில் வாழ்க!

(திருக்கேதீச்சர நாதர் கௌரி அம்மாள் சமேதராக திரு உலாப்போகும் காட்சி பெண்கள் பாடி ஆடி வருகின்றனர்)

மும்முடிச் சோழன் ராஜ ராஜ சோழன்
முக்கண்ணன் சிவனுக்குத் திருப்பணி செய்தான்

இலங்கா புரிதனில் ஆட்சி அமைத்து
ஈசன் திருக்கோவில் இன்புற அமைத்தான்

மாதோட்ட நகர் இனி **ராஜ ராஜசோழபுரம்**
இங்குள்ள ஆலயம் **ராஜ ராஜேஸ்வரம்**
இங்குள்ள ஈசர் **ராஜ ராஜ மகாதேவர்**
இங்குள் ளோர்க்கிது செய்தி என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒலிக்கூற்று

வைகாசி விசாகத்தில் தீர்த்தத் திருவிழாவென்றும் ஆண்டு தோறும் பத்து ஏழு நாட்கள் விழா எடுத்தான்.

## காட்சி – 13

### ஒலிக்கூற்று

சோழர் காலத்திற்குப் பின் பாண்டியர்களுள் சுந்தர பாண்டியன் திருக்கேதீச்சரர் ஆலயத்துக்குத் திருப்பணிகள் செய்தான். இதுபற்றிய விபரம் சிதம்பரத்துக் கல்வெட்டுக்களில் உள்ளன. பின் சிங்கையாரியச் சக்கர வர்த்திகள் தமிழ் நாட்டு இராமேஸ் வரத்தையும் திருக்கேதீ ச்சரர் ஆலயத்தையும் பரிபாலித்து வந்தனர். கி.பி.13 இன்பின் இவ் ஆலயமும், துறைமுகமும், மாதோட்டப் பகுதிகளும் பொலிவிழந்தன. கி.பி.16 இன் ஆரம்பகாலத்தில் கடல் பொங்கிவந்து இப் பிரதேசத்தை மூழ்கடித்தது. தமிழ் நாட்டின் குலசேகரப் பட்டினத்தோடு வாணிபம் செய்த இடமாக இருந்த கப்பல்கள் வந்து மலிகின்ற பெருந்துறைமுகம் அழிந்துபோனது. இருப்பினும் ஆலயம் சிறப்புறவே விளங்கியது.

## காட்சி –14

### ஒலிக்கூற்று

திருக்கேதீச்சரக் கோயிலுக்கு வடக்குப் புறம் கடல்நீர் சூழ்ந்த இயற்கை அகழியாகவும், தெற்குப் புறம் பெரிய அலை அடிக்கின்ற பாலாவி ஆறு பொருந்திய இயற்கை அகழியாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர்களான போர்த்துக் கேசர்களால் கோவில் கொள்ளை அடிக்கப்பட்டு, சூறையாடப்பட்டு முற்று முழுதாகச் சிதைக்கப்பட்டது. போர்த்துக் கேசர் திருக்கேதீச்சரக் கோவிலையும் சுற்று மதில்களையும் உடைத்து கற்களை எடுத்துச் சென்று மன்னார்த் துறைமுகத்தையும், மன்னார் கோட்டையையும், ஊர்காவற்துறைக் கோட்டையையும், ஒரு தேவாலயத்தையும் கட்டினர். வேறு தேவைகளுக்கும் கற்களைப் பயன்படுத்தினர்.

**(போர்த்துக்கேசர் ஆலயத்தைச் சிதைத்தல், கொள்ளையடித்தல் – காட்சி)**

**(மக்கள் விக்கிரகங்கள் சிலவற்றை மண்ணில் புதைத்தும் வேறு இடங்களில் ஒளித்து வைத்தும் காப்பாற்றினர்.)**

### ஒலிக்கூற்று

இன்று பாப்பாமோட்டை என வழங்குமிடம் பிராமணர் (பார்ப்பனர்) குடியேறியிருந்த மேட்டு நிலமாகும். வேட்டையா முறிப்பு என்பது அக்காலத்தில் கேதீச்சரநாதர் வேட்டைத் திருவிழாவிற்கு உலாப்போந்த பகுதியாகும்.

## காட்சி – 15

## ஆறுமுக நாவலர்

### ஒலிக்கூற்று

கி.பி.-19 இல் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நாவலர் பெருமான் இக் கோவில் பற்றி சைவர்களுக்குக் கூறினார். ஆங்கிலேயர் ஆட்சியில் ஆணித்தரமாய் ஆறுமுக நாவலர் அறைகூவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்

**இராகம் : சாமா**

### ஆறுமுக நாவலர்

மறைந்து கிடக்கிறது ஒரு மருந்து - அதன்
மகிமையோ சொல்லிட மிகப் பெரிது.
மாதோட் டத்திலொரு தேன்பொந்து - அங்கு
மகாதேவர் இருக்கிறார் நீ நம்பு.

திரவியம் ஒன்று இருக்கிறது - அது
திருக்கேதீச் சரத்தில் மறைந்துள்ளது.
தேடுங்கள் அங்கே சைவர்களே - நம்
சிவபெரு மான் அருள் கூடுங்களே

## ஒலிக்கூற்று

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்து நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் தாம் எழுதி வெளியிட்ட "யாழ்ப்பாணச் சமய நிலை" என்னும் துண்டுப் பத்திரத்தின் இறுதியில் இலங்கை மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவத் தலங்கள் இரண்டு இவ் இலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருகோண மலைக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்திற்கு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றும், சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகிக் கிடக்கிறதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோவில்கள் கட்டப்படுகின்றனவே. நீங்கள் இந்த மகா ஸ்தலத்தை சிறிதும் நினையாததென்னவோ? இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும். இதை எல்லோருஞ் சிந்தித்து இத் திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வார்."

திருக்கேதீச்சரப் பகுதியில் நாற்பது ஏக்கர் நிலத்தைச் சைவர்களுக்கு விலைக்குத் தரவேண்டுமென்று ஆறுமுக நாவலர் பெருமான் பிரித்தானிய அதிகாரிக்கு கடிதம் எழுதினார்.

நாவலர் பெருமானின் மறைவுக்குப் பின் 1893இல் பிரித்தானியர் அவ்விடத்தை பகிரங்க ஏலத்தில் விட்டனர். பிரித்தானிய அரசின் வடமாகாண பொறுப்பதிகாரியாக கடமை புரிந்த சேர். வில்லியம் துவைனம் துரை அவர்களால் யாழ்ப்பாணம் கச்சேரியில் வைத்து ஏலம் விடப்பட்டது.

தமிழகத்து நாட்டுக் கோட்டை நகரத்து இராம அரு பழனியப்பச் செட்டியார் 3100 ரூபா கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டார்.

கொழும்பில் தொழில் செய்த அவர் தமிழகத்தில் இருந்ததால் அவரால் இங்கு வந்து எதுவும் செய்யமுடியா திருந்தது. அவரோடு தொடர்புகொண்ட நாவலர் பெருமானின் அன்பர் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணை சி.த.மு.பசுபதிச் செட்டியார் அந்நிலத்தை தங்களுக்குத் தரும்படி கூறி சைவ அன்பர்களிடம் பணம் பெற்று கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து முடித்து சைவர்களுக்குச் சொந்தமாக்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் துப்பரவு செய்யப்பட்டு கோவில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் தொடங்கின.பின்பு சேர் கந்தையா வைத்திய நாதன் முதலானோரின் முயற்சியால் காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட லிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டு 1903இல் முதலாவது குடமுழுக்கு செய்யப்பட்டது.

### பாடல்

**இராகம் : பிருந்தாவன சாரங்கா**

சைவர்கள் முயற்சியால் மீண்டது ஆலயம்
சரித்திரப் பெருமையை மீண்டும் பெற்றது
**காசியில்** இருந்து வந்தது லிங்கம்.
ஆலயக் குடமுழுக்கு அழகாய் நடந்தது

### வேறு

கேதீச்சரர் மீண்டும் அருமருந்தாய் - மாதோட்டக்
கேடில்லாப் பெருந்துறையில் கோயில் கொண்டார்.
பாலாவித் தீர்த்தக் கரையினிலே - அமர்ந்து
பாவவினை போக்கி அருள் புரிந்தார்.
தூண் சிற்பக் காட்சிகள் காட்டுதல்

## காட்சி - 16

**இராகம் : மோகனம்**

சிவனுக்கு ராத்திரி சிவராத்திரி - மக்கள்
செய்வினை போக்கிடும் சிவராத்திரி.
பாலாவித் தீர்த்தத்திலே மூழ்கி எழுந்து
பாற்குடம் எடுத்திடும் பக்த வெள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிக்கூற்று

அடியார்கள் பாலாவித் தீர்த்தத்தில் நீராடி பாலாவித் தீர்த்தத்தைப் பாலாகக் கருதி, செம்புகளில் எடுத்து வந்து, ஆலய மேற்குப் பக்கத்தில் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் மகா லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணுதலை தங்கள் நேர்த்திக்கடனாக இப்போது செய்து வருகிறார்கள்.

(பாற்காவடிக் காட்சி, சிவலிங்க பூசை, திருவீதி உலாக் காட்சி)

## காட்சி – 17

**இராகம் : ஆனிரிபைரம்**

இலங்கையிலே கொடிய யுத்தம் நடந்தது – அடியார்
இங்கு வருதலின்றி தடைபட்டது.
கேதீச்சர் அருள் பெற்ற சிவனருட் சிறார்கள்
சிவதொண்டு பலசெய்து திருவருள் பெற்றார்கள்.

(மாலை கட்டுதல், கோலம் போடுதல், கோவிலை அலங்கரித்தல், சுவாமி காவுதல், சிவனருள் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், சிவபுரம் பூந்தோட்டம் அமைத்தல் முதலான திருப்பணிகள் செய்தல் – காட்சி)

ஆலயச் சூழலை அழகாய் அலங்கரித்து
பூமாலை புனைந்தேத்திப் புகழ் பாடினர்
கேதீச்சர நாதரையும் கௌரி அம்பிகையையும்
தோளிலே தாங்கி என்றும் தொண்டுசெய்தார்

சிவனின் பிள்ளைகளாய் நமசிவாய ஐயாவின் தலைமையிலே
சிவனருள் பாலித்திட சிவனருள் இல்லத்தில்
கல்வி கலை கலா சாரம் சிறப்பாய் மிளிர்ந்திட
சிவனருள் சிறார்கள் சிறப்பாய் வளர்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 18

## தில்லானா

**இராகம் : மதுவந்தி** **தாளம் : ஆதி**

### பல்லவி

தாம்த தீம்த தோம்த நம்த திரணா

தித்தில்லானா தித்தில்லானா தில்லானா

தாம்த தீம்த தோம்த நம்த திரணா

தித்தில்லானா தித்தில்லானா தித்தில்லானா தில்லானா

### அனுபல்லவி

தஜ்ஜெம் தஜெம் தஜெம் தகிட தகிட தாங்கு

தஜ்ஜெம் தஜெம் தஜெம் தகிட தகிட தாங்கு

தஜ்ஜெம் தஜெம் தஜெம் தகிட தகிட தக தகிட தகதகிட

தொம் நத் தொம் கிணதொம் திங்கிணதொம் ததிங்கிணதொம்

ததீங்கிணதொம் தத்தீங்கிணதொம் தாங்கு

ததீங்கிணதொம் தத்தீங்கிணதொம் தாங்கு

ததீங்கிணதொம் ததீங்கிணதொம் ததீங்கிணதொம்

### சரணம்

**(திருக்கேதீச்சரநாதர் ஆடும் ஆனந்தத் திருநடனம்)**

தாம் தஜெம் தகதாம் தஜெம் தகதிகு தாம்தஜெம்

ததிங்கிணதொம், ததிங்கிணதொம், ததிங்கிணதொம்

**(திருக்கேதீச்சரநாதர் ஆடும் அற்புதத் திருநடனம்)**

தகதா தகதீ தகதொம் தகநம் ததீங்கிணதொம் தா,

தக ததிங்கிணதொம், தகதிக ததிங் கிணதொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திருக்கேதீச்சரர் கௌரி அம்மையின் சிவசக்தி திருநடனம்)

தாம்தரிகிடதகதாம் தீதரி கிடதக கிடதக தத்தத்தீம்
தோம் தரி கிடதக தத்தித் தோம்
தரிகிட தொம் தா தக்கிட தொம்தா தக்கிடதொம்

(திருத்தில்லை தனிலே சிவனார் ஆடும் பொற்பாதத் திருநடனம்)

தாம் தத்தீம்த தாம் மபநிஸா, கமபநிஸ், ஸ க ம ப நிஸா
ஸநிநித தபபம மககரி ஸகஸம ஸபா மகரி
ஸகமபா மபமத மநீதபம கமபநீ நிஸ் நிர்ரி
நிக்ா நிஸநி தநிஸ்நி க்ரிஸநிதஸா
ரிஸ்நிதபதா ஸநிதமபா கரிஸ்நித ரிஸ்நிதப மபநிஸ்நி

## காட்சி – 19

### பாடல்

திருக்கே தீச்சரம் ஒரு தேன்பொந்து- சிவத்
தேனை அருந்துதற்கு நீமுந்து

நாவலர் காட்டிய வழியாகும் - அது
நம் சைவ மக்களுக்கு விழியாகும்

### மங்களம்

மங்களம் மங்களம் மங்களமே
மங்களம் மங்களம் மங்களமே

மாதோட்ட மருந்துக்கு மங்களமே
மங்கை இடப் பாகற்கு மங்களமே
திருக்கேதீச் சரருக்கு மங்களமே
தென்கயிலை நாதருக்கு மங்களமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி அம்பாளுக்கு மங்களமே
கணபதி முருகனுக்கும் மங்களமே
ஆடலினைப் பார்த்தவர்க்கு மங்களமே
அரனடியார் யாவருக்கும் மங்களமே

மங்களம் மங்களம் மங்களமே
மங்களம் மங்களம் மங்களமே – சுப
மங்களம் மங்களம் மங்களமே

**சுபம்**

குறிப்பு : சிவபெருமான், கௌரியம்மை, மகாவிஷ்ணு மூர்த்தி, பிரம தேவன், மகா துவஷ்டா, மயன், விஸ்வகர்மா, இராவணேஸ்வரன், மண்டோதரி, விஜயன், அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மணிவாசகர், நின்றசீர் நெடுமாறன், மங்கையர்க்கரசியார், சேரமான்பெருமாள் நாயனார், சேக்கிழார், ஆறுமுகநாவலர், இராம அரு பழனியப்பச் செட்டியார், சி.த.மு.பசுபதிச் செடியார், சேர் கந்தையா வைத்திய நாதன், ராஜராஜ சோழன், இராமர், சீதை, அனுமார், இலக்குவன், முதலானோர் காட்சிகளில் வருவார்கள்.

வரலாறுகள் – யானையை உரித்துத் தோலைப் போர்த்த கதை, பாற்கடலைக் கடைந்தகதை, நஞ்சுண்டு இருண்ட கண்டம் ஆகிய கதை, கேது வழிபட்ட கதை, பன்றியின் கொம்பைத் தரித்த கதை, அடிமுடி தேடிய கதை, இராவணனது செருக்கை அடக்கிய கதை, பால சந்திரனைச் சடையில் தரித்த கதை, சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்த கதை, பாம்பை ஆபரணமாக அணிந்த கதை, புலித்தோலைப் போர்த்தகதை, பிச்சை ஏற்ற கதை, இறந்து போன பிரம்ம விஷ்ணுக்களின் மண்டையோடுகளையும் எலும்புகளையும் மாலையாக்கித் தரித்த கதை, முப்புரங்களை எரித்த கதை முதலானவை.

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலாசிரியர் பற்றிய விபரங்கள் சில

**பெற்ற பட்டங்களில் சில**

காவிய மாமணி, கவிமாமணி, திருநெறிய தமிழ் வேந்தர், பல்கலை எழில், புராண படன புகழ் தகை, புராண படன வித்தகர், விநாயகர் புராண வித்தகர், இலக்கியச் சுடர், சிவனருட் செல்வர். வாகீச கலாநிதி, செஞ்சொற் செல்வர், வித்தியா சுரபி, முத்தமிழ்ச் சுரபி, செந்தமிழ்க் கொண்டல், சைவத் தமிழியற் கோ, முத்தமிழ்க் கலைச் சுடர், தமிழியல் வித்தகர், செம்பணிச் சிகரம், செந்தமிழ்ப் பாரிவேள், கலாபூஷணம், தமிழ் மணி, கலை மாமணி, கலாநிதி

**பெற்ற கௌரவங்களில் சில**

**இலங்கையில்**

- ஆளுநர் விருது (வடக்கு - கிழக்கு மாகாணம்)
- நாவலர் விருது (மன்னார் அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியம்)
- கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது. (நாடகம் - யாழ் இலக்கிய வட்டம்)
- முத்தமிழறிஞர் சொக்கன் விருது (முத்தமிழ் - யாழ் இலக்கிய வட்டம்)
- பாரதி விருது (கவிதை - மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றம்)
- நுழைபுலம் ஆய்வு விருது (ஆய்வு - கொழும்பு கம்பன் கழகம்)
- வாழ்நாள் சாதனையாளர் விருது (எழுத்து - கல்வியமைச்சு கொழும்பு)
- வாழ்நாள் சாதனையாளர் விருது (இரா உதயணன், இலங்கை, இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியாவில்**

- விபுலானந்தர் படைப்பிலக்கிய விருது - முற்றத்துக் கரடி சிறுகதைத் தொகுப்பு (தமிழ் நாடு எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக தமிழ்ப் பேராயம்)
- தமிழ் நாடு திருப்பூர் விருது - முற்றத்துக் கரடி சிறுகதைத் தொகுப்பு
- தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற அறந்தை நாராயணன் விருது - கங்கையின் மைந்தன் (நாடகத் தொகுப்பு)
- தமிழ் நாடு திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழக விருது.
- புதுச்சேரி (பாண்டிச்சேரி) குழந்தைகள் கலை இலக்கிய வளர்ச்சிக் கழக விருது.

**நூல்களுக்காகப் பெற்ற விருதுகள்**

- தேசிய சாகித்திய மண்டல விருது - இரண்டு நூல்கள்.
- தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ் - மூன்று நூல்கள்
- வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - இரண்டு நூல்கள்.
- வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - ஆறு நூல்கள்.
- கொழும்பு தமிழ்ச்சங்கம் - ஒரு நூல்
- எழுத்தாளர் ஊக்குவிப்புமைய தமிழியல் விருது - நான்கு நூல்கள்.
- இலங்கை இலக்கியப் பேரவை விருது - ஒரு நூல்
- இலங்கை இலக்கியப் பேரவை சிறப்புச் சான்றிதழ் - இரண்டு நூல்கள்.
- கொடகே தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ் - ஒரு நூல்
- இரா உதயணன் இலக்கிய விருது - ஒரு நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கேதீச்சரம்**

**பாடத்திட்டத்தில்**

**இலங்கை கல்வி அமைச்சின் பாடத்திட்டத்தில்**

- குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் – மரபுக்கவிதை க.பொ.த.சாதாரண தரம், தமிழ்மொழி
- சேற்று வயற் காட்டினிலே - இசைப்பாடல் - க.பொ.த. உயர்தரம், சங்கீதம்
- ஔவையாரும் நெல்லிக்கனியும் - நாடகம் - ஐந்தாம் ஆண்டு தமிழ்

**கிழக்கு மாகாண முன்பள்ளி பாடத்திட்டத்தில்**

- அம்புலிமாமா - குழந்தைப் பாடல்

**டாக்டர் ஓ.கே.குண நாதன்**
மட்டக்களப்பு

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலாசிரியரின் நூல்கள்

1) "செல்" "வா" என்று ஆணையிடாய் (அஞ்சலிக் கவிதை-1977)
2) சேரர் வழியில் வீரர் காவியம் (குறுங்காவியம்,-1982)
3) சமவெளி மலைகள் (அகளங்கன்.சு.முரளிதரன் கவிதைகள்-1985)
4) வாலி (ஆய்வு நூல்.மூன்று பதிப்புகள்.1987, 1989, 2006- இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த இலக்கிய நூலுக்கான சான்றிதழ்- 1987)
5) இலக்கியத் தேறல் (கட்டுரைகள்-1988)
6) நளவெண்பா (கதை-1989)
7) அன்றில் பறவைகள் (நாடகங்கள், 1992-தேசிய சாகித்திய மண்டலப் பரிசு-1992)
8) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (வரலாறு-1992)
9) இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள் - இருபதிப்புக்கள் - 1992, 1993)
10) தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்-1993)
11) பன்னிரு திருமுறை அறிமுகம் - இரு பதிப்புகள் (சமயம் - 1994, 2021)
12) மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு-1994)
13) இலக்கிய நாடகங்கள். (நாடகங்கள்,-1994, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு -1994)
14) ஆத்தி சூடி (விளக்கவுரை-1995)
15) கொன்றை வேந்தன் (விளக்கவுரை-1996)
16) அகளங்கன் கவிதைகள் (கவிதைகள்-1996, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - 1996)
17) வாக்குண்டாம் (மூதுரை - விளக்கவுரை-1997)
18) சிவபுராணம் (பொருளுரை-1997)
19) செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்- மூன்று பதிப்புக்கள் 1997, 2015, 2017)
20) நாமறிந்த நாவலர் (சிறு குறிப்புக்கள்- இரு பதிப்புக்கள், 1997, 2008.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) நல்வழி (பொழிப்புரை -விளக்கவுரை-1998)
22) இசைப்பாமாலை (இசைப் பாடல்கள்-1998)
23) கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு (ஆய்வு-1999)
24) இலக்கியச் சரம் (கட்டுரைகள்- 2000)
25) வெற்றி வேற்கை (நறுந்தொகை - உரை இரு பதிப்புக்கள் 2000, 2015)
26) கூவாத குயில்கள் (நாடகங்கள்-2001)
27) திருவெம்பாவை உரை (சமயம் இரு பதிப்புக்கள் - 2002, 2018)
28) பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை-2003)
29) சுட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்-2003)
30) சின்னச் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்-2005)
31) நறுந் தமிழ் (கட்டுரைகள்-2006)
32) பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு-2007)
33) பத்தினித் தெய்வம்(நாட்டிய நாடகங்கள்-2008-வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
34) வேரும் விழுதும் (கட்டுரைகள்-2008, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
35) கங்கையின் மைந்தன் (நாடகங்கள் - 2009, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு, தமிழியல் விருது, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ், இலங்கை இலக்கியப்பேரவை விருது-.2009)
36) பந்து அடிப்போம் (சிறுவர் பாடல்கள்-2010)
37) சிரிக்க விடுங்கள் (சிறுவர் பாடல்கள்-2010)
38) சகல கலா வல்லிமாலை-(உரையுடன்-2011)
39) அலைக்குமிழ் (நாவல்-2011, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ். கொடகே தேசிய சாகித்திய சிறப்புச் சான்றிதழ். இலங்கை இலக்கியப் பேரவையின் சிறப்புச் சான்றிதழ். தமிழியல் விருது-2011)
40) சின்னஞ் சிறிய சிறகுகள். (குழந்தைப் பாடல்-2012, தேசிய சாகித்திய மண்டலப்பரிசு, வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு, தமிழியல் விருது.-2012.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41) கம்பனில் நான். (கட்டுரைகள். 2013.)

42) முற்றத்துக் கரடி (சிறுகதைகள் - 2014 - தமிழ்நாடு S.R.M. பல்கலைக்கழக தமிழ்ப் பேராய சர்வதேச விருது, தமிழ்நாடு, திருப்பூர், கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் நினைவுப் பரிசு - 2014)

43) தமிழ்த் தூது. வண. பிதா. தனிநாயகம் அடிகளார். (சிறு குறிப்புக்கள் -2014)

44) வன்னிப் பிரதேச வயற் பண்பாடு.( ஆய்வு- 2014, வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு, தமிழியல் விருது-2014, கொழும்புக் கம்பன் கழக நுழைபுலம் ஆய்வுவிருது - 2017)

45) ஞானப்பழம் (பாநாடகம் - 2017, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு)

46) ஆனைகட்டிய அரியாத்தை (நாடகம் -2017)

47) சிறுவர் சிந்தனைக் கதைகள் - 2017

48) சங்கமும் தமிழரும் (ஆய்வு - 2018, வவுனியூர் இரா உதயணன் இலங்கை இலண்டன் இலக்கிய நிறுவகப் பரிசு)

49) எங்கள் காடு (சிறுவர் நாடகம் - 2019, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ்)

50) அகளங்கன் இசை நடனப் பாடல்கள் - (பாடல்கள் - 2021)

51) திருக்கேதீச்சரம் (நாட்டியநாடகம்) - 2022

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகளங்கன்

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் நாடறிந்த தமிழறிஞர். நல்ல கவிஞர். பழந்தமிழ் இலக்கியங்களை ஆர்வத்துடன் கற்றவர்.

இவரது எழுத்துக்களுக்கு தமிழ்நாட்டு அறிஞர்கள் பல பரிசுகளை அளித்து தமிழ்நாட்டில் பாராட்டி யுள்ளனர்.

இவரது தந்தையார் நாகலிங்கம் கோவில்களில் புராண படனம் செய்தவர். வில்லி பாரதம், கம்பராமாயணம் என்பவற்றில் தோய்ந்தவர்.

பல்துறைப் படைப்பாளியான அகளங்கள் வன்னி வள நாட்டைப் போற்றி பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும், கவிதைகளையும், பாடல்களையும், புனைகதைகளையும், நாடகங்களையும் எழுதியுள்ளார்.

அருமையான பேச்சாளர். இவர் எப்போது வாய் திறக்கிறார் என்று தமிழ் காத்திருக்கும். மடை திறந்த வெள்ளம் போலத் தமிழ் பாய்ந்து செல்லும். ஆற்றொழுக்குப் போன்ற இவரது பேச்சு அனைவரையும் கட்டிப் போட்டிருக்கும். கேட்டுக்கொண்டேயிருக்கலாம்.

நாவல்லோன், நற்றமிழ் வல்லோன். வாழ்க அகளங்கன்.

**கேணிப்பித்தன்**

**கலாநிதி. ச.அருளானந்தம்**

**திருகோணமலை**

ISBN : 978-624-6141-01-1

விலை : 500/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org